விலை ரூபா 2-00 ★ 8 பக்கங்கள்

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 | தை 7 | ரபி-ஆகி 28 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை (20—1—85) | இதழ் 336

பூஸாவிலிருந்து வந்த

## 25 இளைஞர்களும் ஆனையிறவில் உள்ளனர்

(யாழ்ப்பாணம்)

காலி 'பூஸா' தடுப்பு முகாமிலிருந்து நேற்று யாழ்ப்பாணம் வரவிருந்த 25 இளைஞர்களும் யாழ் தேவி பளைக்கு வராமையால் ஆனையிறவுமுகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை ரயிலிலிருந்து அழைத்துவர அதிகாரிகள் பளைக்குச் சென்றபோதிலும் காத்திருந்துவிட்டு திரும்பி வந்தனர்.

ஆனையிறவிலுள்ள இளைஞர்களை எவ்வாறுயினும் இன்று யாழ்ப்பாணம் அழைத்து வருவதற்கு யாழ் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் முயற்சி எடுத்து வருகின்றார்.

கிளிநொச்சியில் நேற்று நடந்தது

# பஸ் மீது துப்பாக்கிச்சூடு

# மூதாட்டி மரணம்; பலர் காயம்!

## ரயில்பாதை அருகில் விளையாடிய இரு குழந்தைகளும் பலி !!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று சிறு பாலத்துடன் பாதையொன்று பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டதையடுத்து நடந்த அசம்பாவிதங்களில் பஸ்ஸில் பிரயாணம் செய்த மூதாட்டி பலியானர். பலர் படுகாயத்துக்குள்ளாகினர்கள்.

இச்சம்பவம் நடந்த இடத்துக்கு சற்றுத் தூரத்தில் எண்ணெய் ரயிலில் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ரயில்பாதை அருகில் வீட்டு முற்றத்தில் விளையாடிக்கொண்டிருந்த இரு குழந்தைகள் மரணமாகியுள்ளன.

கண்டி பிரதானவீதியில் பரந்தன் சந்திசகும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைக்குமிடையில் பல அடி தூரமான வீதி இனந்தெரியாதவர்களால் பலத்த சேதத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று பிற்பகல் ஒருமணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது. இதைத்தொடர்ந்து சீருடையினர் இப்பகுதியில் பெருமளவில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். துணுக்காயிலிருந்து சுமார் 100 பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ் ஒன்றின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதில் பஸ்ஸில்பிரயாணம்

[8-ம் பக்கம் பார்க்க]

## படகில் சென்ற 6 இளைஞர்கள் பிடிபட்டனராம்

[கொழும்பு]

நெடுந்தீவுக்குத் தெற்கேயுள்ள கடல்பகுதியில் படகொன்றில்வந்த ஆறு தீவிரவாதிகள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாக ராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மேற்படி படகை கடற்படையினரின் படகு அண்மித்தபோது அதிலிருந்த 4 பேர் கடலில்குதித்து தப்பிவிட்டதாகவும்ஏனைய 6 பேரும்கைது செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

(8ம் பக்கம் பார்க்க)

## எம். ஜி. ஆர். 4-ம் திகதி தமிழ்நாடு திரும்புவார்

(சென்னை)

''தமிழக முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் அடுத்தமாதம் 4-ம் திகதி நியூயோர்க் 'புறூக்ளின்' மருத்துவ மனையிலிருந்து சென்னை திரும்புவார்''

இத்தகவலை தமிழ்நாடு செய்தி, அறநிலையத்துறை அமைச்சர் திரு ஆர் எம். வீரப்பன் நேற்று செய்தியாளர் மத்தியில் தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

ரயில்பாதை சேதம்

## கிளிநொச்சிவரைதான் ரயில்சேவை நடக்கும்

(கொழும்பு)

ஆனையிறவுக்கும் பளைக்கும் இடையிலுள்ள ரயில் பாதையும், பரந்தனில் பிரதான வீதியும் பயங்கரவாதிகள் நேற்று குண்டுவைத்து சேதப்

[8-ம் பக்கம் பார்க்க]

ஊர்காவற்றுறை தபாலகத்தில்

## ரொக்கமும், முத்திரைகளும் கொள்ளை!

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை தபால் அலுவலகத்தில் பெருந்தொகையான ரொக்கப்பணமும்,முத்திரைகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது

நேற்று முன்தினம் [வெள்ளிக்கிழமை] நண்பகல் இக் கொள்ளைச்சம்பவம் இடம் பெற்றுள்ளது

இனந்தெரியாத கோஷ்டியினர் துப்பாக்கி, வெடிகுண்டு சகிதம் அலுவலகத்தில்புகுந்து அங்கு கடமையிலிருந்தவர்களைப் பயமுறுத்திவிட்டு கொள்ளையடித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

சுமார் 1,500 ரூபா பெறுமதியான முத்திரைகளும், 6,000 ரூபா ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப் பட்டதாகக் கூறப்படுகின்றது. (மா)

## வர்த்தகர் விடுதலை

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித் துறையில் இனந்தெரியாத கோஷ்டியினரால் கடத்தப்பட்ட பிரபல வர்த்தகர் விஷ்ணுசுந்தரம் விடுதலை செய்யப்பட்டுள்ளார் ஆனல் இவருடன் அழைத்துச் செல்லப்பட்ட இவரது மகன் அருட்செல்வம் விடுவிக்கப்படவில்லை.

கூட்டணியின் திடீர் மனமாற்றம்

## ஜனதிபதி கூற்றுக்கு அமிர் மறுப்பு

[சென்னை]

'இலங்கை இனப்பிரச்னை விஷயத்தில் ஜனதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தன விடுத்த யோசனையை முழுவதாக எதிர்ப்பதென்று' அறிவிக்குமளவிற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி திடீரென்று மனதைமாற்றிக்கொண்டுவிட்டது என்ற ஜனதிபதியின் குற்றச்சாட்டை தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் நிருபர்களுக்கு அமிர் பேட்டியளித்தார் அப்போதே இதனை மறுத்தார்.

கொழும்பில் சென்ற செப்டம்பர் 30-ல் நடந்த அனைத்

(8-ம் பக்கம் பார்க்க)

## இடமாற்ற பட்டியல்

[யாழ்ப்பாணம்]

1683 ஜூலை கலவரத்தினுல் பாதிக்கப்பட்டு பிற மாவட்டங்களிலிருந்து இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களின் மற்றுமொரு பட்டியல் கல்வியமைச்

(8ம் பக்கம்பார்க்க)

## மாமனும் மருமகனும் சுட்டுக் கொலை

[வவனியா நிருபர் ரி. விவேகராசா]

மாமனும், மருமகனும் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இறந்துகிடந்தனர். வவனியா பகுதியிலுள்ள சமலங்குளம் என்ற இடத்திலேயே இச் சம்பவம் நடந்துள்ளது

48 வயதான ஜோன்பிள்ளை ராசதுரை என்பவரும், 25 வயதான சயாநிதி என்பவருமே கொலையுண்டு கிடந்தவர்களாவர்.

இவர்களது வீட்டிற்குச் சமீபத்தில் உள்ளவீதியில் மரணங்கள் நிகழ்ந்துள்ளன வவனியா ஆஸ்பத்திரிக்கு இவ்விரு சடலங்களும் நேற்றுக்கொண்டு வரப்பட்டன.

## தகர்க்கப்பட்ட பால வீதி சிரமதானம் மூலம் சீரமைப்பு

[யாழ்ப்பாணம்]

வல்லைவெளிக்கும் அச்சுவேலிக்குமிடையிலுள்ள தகர்க்கப்பட்ட பாலவீதி இளைஞர் கோஷ்டியினுல் சிரமதான மூலம் சீரமைக்கப்பட்டுள்ளது. இதனுல் நேற்றுத் தொடக்கம் இப்பாதையூடாக பஸ் சேவைகள் நடைபெற்றன.

(8-ம் பக்கம் பார்க்க)

ராணுவத்தினர் முகாமிட்டிருக்கும்

## தொழிற்சாலையில் மீண்டும் உற்பத்தி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்

நாவற்குழியில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ள பிரபல நீர் இறைக்கும் இயந்திரத் தொழிற்சாலை மீண்டும்தனது உற்பத்தியைத் தொடக்கவிருக்கிறது

தொழிற்சாலையில் உற்பத்தி பாதிக்கப்படாதவாறு ஒரு பகுதியை ஒதுக்கிக்கொடுக்க இணைப்பு அதிகாரி பிரிகேடியர் நளின் செனவரத்ன இணக்கம் தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலை நிர்வாகத்தினர் இணைப்பு அதிகாரியைச்

(8ம் பக்கம் பார்க்க

# அரி வளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலியில் வசதியான இடத்தில் 1 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு S. நவரத்தினம், முடமாவடிச்சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம். 1414

செம்மணி கண்டி வீதியை எல்லையாகக் கொண்ட செய்கையில் உள்ள 40 பரப்பு நெல் வயல் விற்பனைக்குண்டு. தொடர்பு: கனகரத்தினம், 63/1, நல்லூர் குறுக்குத் தெரு. 1344

வீட்டுப் பாவனைக்கு தேவையான நவீன மின்சார உபகரணங்கள் நவீன தளபாடங்கள் T. V. டெக் முதலின விற்பனைக்குண்டு. தொடர்பு: எ ச. ஜெறி 53/1 ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணம். 1411

புதிய சைனீஸ் பிளேற்ரன், 36'' கட்டர். புதிய தமிழ், ஆங்கில எழுத்துக்களுடன் இயங்கும் அச்சகம் உடன் விற்பனைக்கு அல்லது மாதாந்த குத்தகைக்கு கொடுக்கப்படும் நேரில் வரவும். தமயந்தி அச்சகம், மானிப்பாய். 1406

கே. கே எஸ். வீதியில், முட்டாஸ் கடை சந்தியிலிருந்து சத்திரச் சந்திக்கிடையில் ஒரு கடை விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 148, கே. கே. எஸ், ரோட், யாழ்ப்பாணம். 1376

அழுத்தமான ஆட்டுக்கல் அம்மி - கல்உரல் அனைத்தும் கைதேர்ந்த கலைஞர்களால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோஸ், கந்தசாமி கோவில் வீதி, வவுனியா அல்லது சாவகச்சேரியில் சுல்த்தான் அப்துல்காத, சகோதரர்கள் அல்லது கண்டி வீதி, கிளிநொச்சி. 1314

தெல்லிப்பளை பார்மணியம் ஒழுங்கையில் மூன்று(3) பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி விற்பனைக்குண்டு. பிரதான ஒழுங்கையிலிருந்து வாகனம் செல்லக்கூடிய பாதையுண்டு. விபரங்கட்கு ஏ. சோமபாலன் ''தாரகை'' கேணிக்கரை அளவெட்டி. 1386

கோண்டாவில் இருபாலை ரோட்டில் 1½ பரப்பு வீடு கட்டக்கூடிய காணியும் இராச வீதியில் 8 பரப்பு காணியும் கோப்பாயில் 30 பரப்பு தொழிற்ஸ்தாபனம் அமைக்கக்கூடிய காணியும் சகலவசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு. பொ. பாலசுப்பிரமணியம் பழனி கோவிலடி கோண்டாவில். 1428

3 மாத, 1 மாத சேவல் குஞ்சுகளும் 2 மாத Broilers குஞ்சுகளும் உண்டு. இல 4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். 1439

நல்லூரில் 1½ பரப்பு திருநெல்வேலி சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு வெறும் காணிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. தனபாலசிங்கன் அனுமதிபெற்ற நில அளவையாளர் (நல்லூர் வீடியோ சென்டர்) 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம். 1435

முல்லைத்தீவு பிரதான வீதியில் சந்தை பஸ் நிலையம் ஆகியவற்றுக்கு மிக அண்மையில் வியாபாரத்துக்கு அல்லது வீடு கட்டக்கூடிய ஒரு பரப்பளவுள்ள காணிவிற்பனைக்குண்டு. தொடர்பு: 372, புருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம். 1434

## விற்பனைக்கு

2"Lathe Welding Plant 5 அந்தர் தராசு மோட்டோஸ் விற்பனைக்கு உண்டு. இல:4 செட்டிக்தெரு ஒழுங்கை, நல்லூர். 1440

இருபாலை கிழக்கு செட்டிய குறிச்சியில் பனை, தென்னை பிரயோசனங்களுடன் கூடிய 35 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சண்முகம் அன் சன்ஸ் 222 (432) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 1420

புதிய National (Latest Model) 20'' கலர் T. V., சிங்கர் தையல் மெஷின் sisel குளிர்சாதனப் பெட்டி மற்றும் கட்டில் மேசை, கதிரைகள் தளபாடச்சமான்கள் உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும். மு. ஜெயபாலன் 15/4 முருகேசர் ஒழுங்கை நல்லூர் - யாழ்ப்பாணம். 1430

## தேவை

25 வயதுக்குட்பட்ட படித்த மாணவர் விற்பனையாளராக பணிபுரிய தேவை. யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்டவர் மட்டும் நற்சாட்சிப்பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும். ஞானசுரபி புத்தகக் கம்பனி 217 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1427

எழுதுமட்டுவாளில் உள்ள தென்னம் தோட்டம் ஒன்றை பராமரிப்பதற்கு ஒரு குடும்பம் தேவை. நேரில் வரவும். சரஸ்வதி ஸ்ரோர்ஸ் 55 பெரிய கடை யாழ்ப்பாணம். 1425

தமிழும் ஆங்கிலமும் ரைப்பிங் (Typing) தெரிந்த ஆண் அல்லது பெண் தேவை. யாழ. நகருக்கு அண்மையில் உள்ளவர் விரும்பத்தக்கது. 28-01-85க்கு முன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல 1437 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1437

## வாடகைக்கு

சகல வசதிகளுமுள்ள இரு படுக்கையறைகள் கொண்ட புதியவீடு. பாதுகாப்பான இடம் பஸ் நிலையத்திலிருந்து ஒரு மைலுக்குள் வாடகைக்குண்டு. தொலைபேசி; 22649 1424

கச்சேரி, பாடசாலைகள், தேவாலயங்களுக்கு அருகாமையில் எல்லா நவீன வசதிகளுடன் கூடிய புத்தம் புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு; எ. ச. ஜெறி 53 1 ரெம்பிள் வீதி, யாழ்ப்பாணம். 1410

## பயிற்சி

றேடியோ -டெலிவிசன்- வீடியோடெக் றிப்பியறிங், எலக்ரிக்கல் வயறிங் - மின்சார பொருட்கள் திருத்துதல் ஆகிய பயிற்சிகள் தபால்மூலம் தமிழ் மொழியில் பயிற்சியளிக்கப் படுகின்றன. விபரங்களுக்கு நேரில் அல்லது முத்திரை ஒட்டிய தபாலுறையை அனுப்பி பெற்றுக்கொள்ளவும். Jaffna Technical Institute, 52/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 1413

## சோதிடம்

சனி வியாழ ராகுகேது மாற்றத்தினல் 1985 - உங்களுக்கு எப்படி? பன்னிருராசிகளின் பூரணபலன் ரூபா 2. சோதிடர் V, A. சிவராசா வேலணை, 1441

## கல்வி

G. C. E. (O/L)இல் கட்டாய பாடமாகிய கணிதம் 16 வருட அனுபவமுள்ள ஆசிரியரினல் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்காக நுணுக்கமான முறையில் குறைந்த காலத்தில் வீடுகளிற் கற்பிக்கமுடியும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும். K. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி யாழ்ப்பாணம். 1431

## FOR SALE

General 18'' Colour Complete Stand, Antenna Booster National 777 Video Deck with packing T. Arulkumar, Church lane, Kokuvil. 1422

## WANTED

Jaffna Hindu Vellala Father Seeks a Suitable Partner for his Son, 31 Yrs of Age. Manager of a Reputed Mercantile Firm in Jaffna. Having Mars in The 7th house Please Forward Horoshope and Details of Dowry. Available and Photograph. (All Returnable) in The 1st Instance. Advt. No. 1416, C/o Eelanadu. 1416

## பிறந்தநாள் வாழ்த்து

### செல்வன் மஹாதிலக்



கல்வியங்காடு. 3-ம் கட்டை யோகேஸ்வரன் சுலோசனா தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் மஹாதிலக் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (20-1-85) இணுவிலில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். 1432

## 'பூஸா'விலிருந்து கடிதம் வராததால் பெற்றோர் கவலை

[கொழும்புத்துறை]

காலி 'பூஸா' தடுப்பு முகாமில் பாதுகாப்பில் உள்ளதாக அறிவிக்கப்பட்ட சில இளைஞர்களிடமிருந்து கடிதங்கள் கிடைக்காததால் பெற்றோர் அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளனர்.

யாழ். பிரஜைகள் குழுப் பிரதிநிதிகள் காலி பூஸா முகாமுக்கு விஜயம்செய்து அங்கு பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களிடமிருந்து அவர்களின் பெற்றோருக்குக் கடிதங்களைப் பெற்று வந்தனர்.

சில பெற்றோருக்கு அவர்களது பிள்ளைகளிடமிருந்து கடிதங்கள்கொடுத்து விடப்படாததால், பிரஸ்தாப பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று அச்சம் அடைந்துள்ளனர். பூஸா முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட தமது மகன்மார்களின் நிலை என்னஎன்று அறிவதில் பல பெற்றோர் யாழ். பிரஜைகள் குழுவினரிடம் தொடர்பு கொண்டுள்ளனர்.

## நன்றிநவிலலும் 31ம்நாள் சபிண்டீகரண அழைப்பும்

### திரு. மாரிமுத்து கந்தையா

ஜெனனம்: 10-04-1929 மரணம்: 22-12-1984



அன்பின் உருவமாய் அருளின்உறைவிடமாய் பண்பின் சிகரமாய் விளங்கி எம்மை வழிகாட்டிய குடும்ப விளக்கே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னரின் அந்தியேட்டி கிரியைகள் 21-01-1985 திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் உறவினர், நண்பர்கள் அனைவரையும் நம் தெய்வத்தின் ஆத்மா சாந்தி வழிபாட்டில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம.

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மாமன், மாமி.

கோவிலாக்கண்டி, கைதடி. 1433

## சிக்மா பம்ப்ஸ்

### அறிவித்தல்


விவசாயிகளுக்கும், வீட்டுப் பாவனையாளர்களுக்கும் தேவையான நீர் இறைக்கும் இயந்திரங்களையும், மோட்டர்களையும் தடையின்றி விநியோகிக்க ஒழுங்குகள் செய்துள்ளோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

யுனைரெட் அக்ரோ என்ஜினியரிங்,
ஒட்டோஸ் கட்டிடம்,
190, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

1426

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு

## வெளிநாடு செல்ல ஓர் அரியசந்தர்ப்பம்



1. பேர்லின் [BERLIN] பிரான்ஸ் செல்ல விரும்புவோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
2. யாழ்ப்பாணத்திலிருத்து உடனடியாக குறைந்த கட்டணத்தில் உங்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.
3. யாழ்ப்பாணத்திலிருந்து கட்டுநாயக்கா செல்லும்வரை எமது பிரதிநிதி உங்களுடன் வந்து சகல ஒழுங்குகளையும் செய்து கொடுப்பார்.
4. கொழும்பில் தங்குமிட வசதி, உணவு கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா செல்லும் ஒழுங்குகள் காசோலைகள் (TRAVELLERS CHEQUE) இலவசமாக செய்து கொடுக்கப் படும்.
5. மற்றும் INDIAN VISA, PASSPORT, RENEWAL, ATERATION ஆகியன செய்துகொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ளவும்.

Mrs S. Balasingam
Quick Enterprises,
Travels and tours,
533. Stanley Road,
Jaffna.

Branch:-
Saraswathy Garden,
Church Road,
Chavakachchari,
T. Phone: 273

# எமது சிறுகதை

## எங்கள் வட்டத்தினுள்ளே

மருதமுனை சி. கதிர்காமநாதன்



பாடசாலை வாழ்க்கையைத் துறந்து ஏழு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. ஏழு வருடங்கள் கழித்துவிட்டனவா. நினைக்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது முடிந்த இந்த வருடங்களில் நான் சாதித்தது என்ன? ஒன்றுமில்லை. மூன்றுவேளை சாப்பிட்டதும் வாசிகசாலை போனதும் படங்கள் பார்த்ததும் இலக்கியங்களை பற்றி கதைத்து அதனால் சண்டை பிடித்ததும். இவ்வளவுதான் கண்ட மிச்சம்.

ஆனால்......

கடந்த வருடங்களில் 'என்ன இவன் ஒரு பொறுப்பில்லாமல் திரியிறான்' என சதா கேட்டுத் துளைக்கும் பெற்றோரின் பார்வைகளையும் தாங்கி தெரிந்தவர்கள் உறவினர்களின் ''தம்பி இப்ப என்ன செய்யிறாய்?'' என்ற கேள்விகளையும் அந்தக் கேள்விகளின் தாக்கத்தினால் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் கூனி, குறுகி, சிரித்து சமாளித்து... அப்பப்பா...

இவை எல்லாவற்றையும் சமாளித்து, எதிர்த்து, கடந்து வந்தது சாதனை அல்லவா?

படிக்கும் போது ஆகப்புத்திசாலி அல்லாமலும் ஆக மூட்டாளில்லாமலும் இருந்த அந்த இடைநிலையில் படித்துப் பத்தாம் வகுப்புவரை ஓடி கடைசித் தேர்வில் சில தடவைகள் சறுக்கி விழுந்தபின் உயர்தர வகுப்பை எட்டிப் பிடித்து மூச்சு வாங்கி நின்றபோது படிப்பின் தன்மையை முற்றும் உணர்ந்து கொள்ளக்கூடியதாக இருந்தது.

சேர்ந்து படித்த நாற்பதில் நாலுபேர் மட்டும் மேலே படிக்க அனுமதி கிடைத்துப் படிக்கபோய் அதனை மற்றவர்களை மட்டாள்களாக மாற்றியது. இதுஅவர்களின் தவறு? அல்லது படித்த கல்விமுறையின் குறையா? தெரியவில்லை.

மொத்தத்தில் இப்போது சில கல்வித் தகுதிப்பத்திரங்களும்அனுபவங்களும் சில நண்பர்களும் இவை மட்டும்தான் இந்த வருடத்தின் 'ஆரம்ப சரக்கிருப்பாக இருக்கிறது. சில வேளையில் நாளைக்கு வேலைக்கு போவதென்று சொல்லி இரண்டு அல்லது மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து போய் வந்து, பின்னர் அதனைக்குழப்பி இடையில் நிற்பது என் குற்றமல்ல. சிலவற்றை ஆடையை மாற்றுவதுபோல் இலகுவில் சொல்லிவிடமுடியாது. அப்படிச் சொல்லமுடியாமல் வாய் மூடி மௌனியாக நின்ற பலன்...

' சும்மாஇருந்து சாப்பிட்டுச் சுத்தித்திரிஞ்சு இருந்தவனை ஒருடத்தில் கட்டிவைத்தால் நிப்பனே?''

இவையெல்லாவற்றையும் கேட்டு அனுபவித்து உயிரைப் போக்கும் வேறு''நடவடிக்கைகளில் ஈடுபடாமல் ஏதோ மனத்தில் அடிக்கடி தோன்றும் நம்பிக்கையுடன் வாழத்தான் ஆசை.

நீண்ட காலத்திற்குப் பிறகு கண்ட நண்பன் கூட என்ன சொன்னான்?

''மச்சான், நான் இப்ப ஆயிரம் ரூபாய்க்கு மேலே சம்பளம் எடுக்கிறன். ஆனால் இந்த வேலையை எடுக்க நான் பட்ட பாடு கடவுளுக்கும் தெரியாது. நீ இப்ப வேலையில்லாமல் சும்மா இருக்கிறது சரியான கஷ்டந்தான். நீ நினைப்பாய் நான் ஏதோ சந்தோஷமாக இருக்கிறனெண்டு. எல்லோருக்கும் பிரச்சனைதான்'' என்றான்.

அப்படியானால் எல்லோரும் பிரச்னைகளோடு மாரடித்து வாழத்தான் வேண்டியிருக்கிறது. நிச்சயம் அப்படித்தான் வாழவேண்டுமா? யோசிக்க யோசிக்க ஒரே குழப்பமாய் இருக்கிறது நண்பர்களோடு சேர்ந்து இருக்கும் நேரத்தில் கொஞ்சமாவது மனத்திற்கு ஆறுதலாக இருக்கும்.

ஆனால் இப்போது நெருங்கிய நண்பர்கள் இருவரையும் காண்பது மிக அரிதாகிவிட்டது எங்கே போகிறார்கள்; எங்கே நிற்கிறார்கள் என்பதே தெரியவில்லை. படிப்பில் எவ்வளவு ஆர்வமும் அக்கறையுமாக இருந்தவன் பாலன். ஆசிரியர் படிப்பிக்கும்போது பாடப்புத்தகத்தினுள் கதைப் புத்தகம் வைத்துப் படித்தவன் தயாபரன். இப்போது அவர்கள் எவ்வளவு மாறிவிட்டார்கள்.

அவர்கள் தாங்களாகவே மாறினார்களா? சூழ்நிலைதான் அவர்களை மாற்றியதா?

வழக்கம்போல சேட்டைப் போட்டுக்கொண்டு வாசிகசாலை போவதற்கு வெளியே வந்தேன்.

அம்மா, வாசிகசாலைக்குப் போறன். ஆரும் வந்து தேடினா வாசிகசாலைக்கெண்டு சொல்லுங்கோ''.

அம்மா எனக்கு பதில்சொல்வது கேட்டது.

''கெதியாய்ப் போட்டு வா. பொழுது படும்மட்டும் கதைச்சுக்கொண்டு நில்லாதே''

அம்மாவும் இப்படிச் சொல்வது வழமையாகிவிட்டது. இதைப்போல் எத்தனையோ விடயங்கள் வழமையாகவிட்டன.

சைக்கிளைவிட்டு வாசிகசாலைக்குள் நுழைந்தால் ஒருபேப்பர் பல துண்டுகளாகப் பலரது கைகளில். பொறுமையாக நின்று வாசித்துவிட்டு வெளியே வர எதிரே லெனின் தாடியுடன் நிற்பது தயாபரன் தான்.

''ஓ! நீங்கள் இப்ப பெரிய ஆட்கள்! வீட்டையும் வரமாட்டியள்'', என்று சொல்லி முடிப்பதற்குள் வயிற்றில் மெல்லிய குத்து விழுந்தது

''சும்மா இந்தக் கதையை விட்டுப்போட்டுப் புத்தகமொன்று தாறன், கொண்டு போய்வாசியும்''.

வீட்டிலை வாசிக்கிற புத்தகம் காணுதெண்டு நீரும் தரப்போறீரோ?''- நான் சொன்னேன்.

''நீர் வாசிக்கிற புத்தகத்தைக்கொண்டேக் குப்பையில போட்டிட்டுஇதை வாசியும்!''

அவன் திணித்த சனத்த புத்தகத்தை பெற்றுக்கொண்டு தலைப்பை பார்த்தேன்- 'வீரம் விளைந்தது'

மூன்பு அவன் வாசித்த புத்தகங்களுக்கும் இப்போது அவன் வாசிக்கின்ற புத்தகத்துக்கும் எவ்வளவு வேறுபாடு.

சைக்கிளில் திரும்பிக்கொண்டிருந்தபோது பாலனின் ஞாபகம் வந்தது.

''பாலனைக் காணேல்லை. என்ன செய்யிறான்?''

''நானும் கண்டு கனநாள். ஆள் இப்ப வீட்டிலை இல்லையாம்'' விளங்கிக்கொள்ள முடியாத வலிபோன்ற உணர்வு.

''வீட்டில் இல்லையென்றால்'' என்று கேட்டேன்.

''அவன் இஞ்சை தான் நிக்கிறான். ஆனால் வீட்டை போறேல்லை'' என்றான்.

மேலும் கேள்விகள் நான் கேட்கவில்லை சிலவற்றை அறிந்து துன்பப்படுவதைவிட அறியாமல் விடுவது நல்லதாகப்படுகிறது. வீடு வந்தடைந்ததும் நண்பன் போய்விடுகிறான். எனக்குள் நான் காலத்தை வீணடித்துக்கொண்டிருக்கிறேன் என்பது போன்ற உணர்வு.

இரவு வந்தது நேரம் ஒன்பது மணிக்கு மேலிருக்கும். நாய் குரைக்கும் சத்தமும் அதைத்தொடர்ந்து சைக்கிள் மணியோசையும்.

வெளியே வந்தால் எதிரே நிற்பது தயாபரன்தான்.

''என்ன வேற புத்தகம் தரப்போறீரோ?''

நான் கேட்டதற்கு அவனிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை. முகம் இறுகிக் கிடக்கின்றது.

''விஷயம் கேள்விப்படேல்லைப் போல கிடக்கு.''

''என்ன விஷயம்? எனக்குத் தெரியாது சொல்லும்'' என நான் அவசரப்படுத்தினேன்.

''குமார் மருந்து குடிச்சுப் சுப்போட்டான். வீட்டிலை சண்டை பிடிச்சவனாம். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகேக்க இடையில ஆள் சரி.''

எனக்கு உடம்பு விறைத்தது.

''கடவுளே அண்டைக்கு வழியில கண்டு கதைச்சனான். அப்ப சொன்னவன் தனக்கும் பிரச்சனை இருக்கிறதென்று'' நான் இடிந்துபோய் இருக்கிறேன்.

''என்ன கடுமையாய் யோசிக்கிறீர்?''

''இல்லை எங்கட வாழ்க்கையை நினைச்சுயோசிக்காமல் என்ன செய்யிறது''

''இப்படித்தான். முடிவு எப்படி முடியுமென்று சொல்ல முடியாது. அதுவும் குறிப்பாக எங்களை போன்றவர்களின் முடிவு எந்த நேரத்தில் எந்த உருவில் வருமென்பதைச் சொல்லவே முடியாது அவன் சொல்வதைக்கேட்டு நான் கலங்கி நிற்கிறேன்.

நாளை நண்பனின் மரணச் சடங்கில் சந்திப்போம் என கூறி நண்பன்போய்விடுகிறான்.

(யாவும் கற்பனை)


### இளைஞர் ஆண்டு

இளைஞர் ஆண்டாம்
1985!
கொண்டாட்டத்துக்கு
நமது இளைஞர்களைத்
தேடுகிறோம்
தேடுகிறோம்
தேடுகிறோம்.....!

— கணேஷ்


# சாள்ஸ் டிக்கின்ஸின் ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'



8

## ஒலிவர் போனவன் எங்கே?

ஒலிவர் பார்ப்பதற்கு வடிவாகவும்: நல்ல பழக்கம் உள்ளவனாகவும் இருக்கிறான் என்பதில் திரு கிறிம்விக்கிற்கு எதுவிதசந்தேகமும் இல்லை. ஆனால் எதிலுமே மாற்றுக் கருத்தைக் கொண்டிருப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். நண்பரின் போக்கு பிரவுண்லோவுக்குத்தெரியுமாகையால் அவர் சொன்னவைகளைப்பகிடியாகவே பொறுத்துக் கொண்டார்.தேனீர்பரிமாறப்பட்டது. ஒலிவருமதில் கலந்துகொண்டு மகிழ்வுடன் இருநதான்.

இவர்கள் பேசிகொண்டிருக்கும்போதே திருமதி பெட்வின் ஒரு சிறியபுத்தகப் பார்சலை கொண்டுவந்து கொடுத்தார். பார்சல் முன்புதிருபிரவுண்லோவிடம் சேப்படி நடைபெற்ற இடத்திலுள்ள புத்தகசாலையிலிருந்தே வந்திருந்தது. ''பார்சல் கொண்டுவந்த பையனை நிற்பாட்டு பெட்வின், சில புத்தகங்களைத் திருப்பி அனுப்ப வேண்டும்'' என்று கூறினர் முதியவர். ஆனல் அதற்குள் புத்தகக் கடை பையன் போய் விட்டிருந்தான்.

''புத்தகங்களை ஒலிவர் மூலம் அனுப்பிவைக்கலாமே'' என்று கூறினர் கிரிம்விக் விஷமமாகச் சிரித்தபடி ''இவன அவைகளைப் பத்திரமாகச் சேர்த்து விடுவான்'' என்று மேலும் கூறினர்.

''ஆம் ஐயா நீங்கள் விரும்பினல் நான் கொண்டுபோய் கொடுத்துவிடுகிறேன்'' என்று கூறினன் ஒலிவர்.

''ஆம் நீ போய் வா தம்பி, ஒரு மேசை மீது அந்தப் புத்தகங்கள் இருக்கின்றன எடுத்துக்கொள்'' சென்றார் கிழவர் முதியவர்க்கு பயனுள்ள விதத்தில் உதவமுடிகின்றது என்றவகையில் மகிழ்ச்சியுடன் அப் புத்தகங்களை எடுத்துக் கொண்டு போவதற்குத் தயாரானன் ஒலிவர்.

''அங்கு என்ன நீ சொல்ல வேண்டும் தெரியுமா?'' என்று ஆரம்பித்தார் பிரவுண்லோ. நண்பர் கிரிம்விக்கைப் பார்த்தபடி.

''இவைகளைத் திருப்பிக் கொண்டுவந்திருப்பதாகச் சொல்லவேண்டும். அவர்களுக்கு நான் செலுத்த வேண்டிய பணத்தையும் கொண்டு வந்திருப்பதாகச் சொல்ல வேண்டும். இதோ இது 5பவுண் நோட்டு, அவர்களுக்குக் கொடுத்தது போக பத்துஷில்லிங்காசு நீ திருப்பிக்கொண்டு வரவேண்டும்'' என்று பிரவுண்லோ கூறி ஒரு 5 பவுண் நோட்டையும் அவன் கையில் வைத்தார்.

''பத்துநிமிடம் கூட எடுக்காது'' என்றுகூறியபடி பவுண் நோட்டை கோட் பாக்கட்டில் வைத்துக்கொண்டு பத்தகங்களையும் கக்கத்தில் இடுக்கிக் கொண்டு புறப்பட்டான் ஒலிவர்.

திருமதி பெட்வின் வாயில் வரைவந்து கடைக்குப்போகும் வழி, கடைக்காரனின் பெயர் விலாசம் எல்லாம் சொல்லி மிகக் கவனமாகப் போ வரும்படி கூறி அனுப்பிவைத்தார்.

''இனிய பையன் என் பார்வையிலிருந்து அவன் விலகிச் செல்வதைக்கூட என்னல் தாங்கிக்கொள்ள முடியவில்லை'' என்று பெட்வின் தனக்குள் கூறிக்கொண்டார்.

ஒலிவர் நேரே சென்று ஒரு வளைவில் திரும்பும் சமயம் பின்னல் பார்த்து தலையைக் ஆட்டிக்கொண்டான் திருமதி பெட்வின் அவனுக்குபதில் தருவதுபோல்தலையைஆட்டிவிட்டு கதவை மூடிக் கொண்டு உள்ளே சென்றார்.

''அவன் அதிகம் போனல் 20 நிமிடங்களில் திரும்பி விடுவான்'' என்று கூறியபடி தமது கடிகாரத்தை எடுத்து மேசைமீது வைத்துக்கொண்டார் பிரவுண்லோ.

''ஓ! அப்ப அவன் திரும்பி வருவான்என்றுஎதிர்பார்க்கின்றீயா'' என்று கேட்டார் கிறிம்விக்

''அப்படி நீர் நினைக்கவில்லையா'' என்று கேட்டார் முதியவர்.

'' இல்லை''என்றுகூறி மேசை மீது உறுதியாகக் கையால் அடித்தார் கிரிம்விக்''. அவன் புதுசூட் போட்டுக்கொண்டிருக்கிறான். கக்கத்தில் புதிய புத்தகங்கள் —பாக்கட்டில் 5 பவுண் நோட்டும் இருக்கிறது. அவன் தன் சிநேகித திருடர்களுடன் சேர்ந்து கொண்டு உன்னைப்பார்த்துச் சிரிப்பான்'' என்று கூறிய கிரிம்விக் ஒலிவர் திரும்பியே வர மாட்டான் என்று அடித்துக் கூறினர்.

இருவரும் மேசையருகில் அமர்ந்து கடிகாரத்தை வைத்

(4ம் பக்கம் பார்க்க)

# தொடர் நவீனம்

அலுவலகம் முழு இயக்கத்துடன் செயற்படுகிறது. எல்லோரும் ஏதோ ஒருஅலுவலைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். கலா ஏதோ ஒரு பைலைத் திறந்து வைத்துக் கொண்டு தனது முகத்தைப் புதைத்துக் கொண்டிருக்கிறாள்.

அழைப்பு மணி அலறுகிறது.

உள்ளே ஓடிய கோபாலு திரும்பி ஓடிவந்தான்.

''கலாம்மா... ஏ டி [கூப்பிடுகிறார்''.

கலா எழுந்து சென்றாள்.

எஸ். ஏ. மூக்குக்கண்ணாடிமேற் பார்வையால் அவள் போவதையே பார்த்துவிட்டு முகத்தைச்சுழித்துக் கொண்டார்.

உள்ளே சென்ற கலா, பேசாமல் பிரேமகாந்தனின் மேசையருகே நின்றாள் வழக்கமாக அவன் கூப்பிட்டவுடன் ஒரு துள்ளலுடன் உள்ளே ஓடிவரும் அவள் இன்று மெதுவாக நடந்துவந்து மௌனமாய் நின்றதை அவன் எதிர்பார்க்கவில்லை.

''குட்மோர்னிங்...'' சிரித்தபடியே கூறினான் பிரேமகாந்தன்.

''குட்மோர்னிங் சேர்''— வார்த்தைகளில் உற்சாகம் தொனிக்கவில்லை.

''கலா, என்ன நடந்தது உமக்கு! ஏன் முகம்சரியில்லை... ஏதும் சுகமில்லையே ?''

கலா சிறிதுநேரம் ஒன்றும் பேசாமல் நின்றாள்.

''சேர்.. நீங்கள்... உங்களுக்குக் கலியாணம் ஆகிவிட்டது தானே !''

இதைக் கேட்கும்போதே கலாவின் குரல் தளதளத்தது.

பிரேமகாந்தன் சற்று நிலைகுலைந்துவிட்டான். இக்கேள்வியை அவன் எதிர்பார்க்கவில்லை தனது லீலைகள் எப்பொழுதாவது வெளிவரும்; தான் திருமணமானவன்; இரண்டு பிள்ளையளுக்குத் தந்தையாய் இருப்பவன்என்ற

9

உண்மைகள் கலாவுக்குத் தெரியவரும் என்று எண்ணியிருந்தானாயினும் இவ்வளவு சீக்கிரத்தில் தனது குட்டு வெளிப்படுமென்று நினைக்கவில்லை. கலாவின் கேள்வியால், சற்று நிலைகுலைந்தாலும் அது ஒரு கணம்தான் நீடித்தது: மறுகணம் அவன் தன்னைச் சுதாகரித்துக் கொண்டான்.

மெதுவாக தனது இருக்கையை விட்டு எழுந்து வந்தான்.

''டார்லிங்...!'' நான் உமக்குத் துரோகம் செய்ததாக நினைக்கிறீரா?'' - அவளின் கையைப்பற்றிக் கொண்டே அவன் இப்படிக் கூறினான். கலா அதை விலக்கமுடியவில்லை.


''சேர் ... நீங்கள் உங்களைப் பற்றி எனக்குச் சொல்லியிருக்கலாம்...'' — நான்... நான் ஏமாந்து போனன்...?'' கன்னங்களில் முத்தென உருண்டது கண்ணீர்.

''நோ, நோ ! நீர் அழக்கூடாது!'' —பதறிப்போனான் பிரேமகாந்தன். சட்டென்று தனது கால்சட்டைப் பொக்கற்றுக்குள் கையை விட்டுத் தனது கைக்குட்டையை எடுத்து அவளது கண்ணீரைத் துடைத்தான்.

கலா அசையவில்லை.

''டார்லிங் நான் உம்மை ஏமாற்றவில்லை. நான் உம்மை மனமார விரும்புகிறேன்... நான் கலியாணமானவனெண்டு உமக்குத் தெரியுமெண்டுதான் எண்ணினனான்......''

## பூம்பனிமலர்கள்




''சேர்.. நீங்கள் இதை எனக்கு முதலில் சொல்லியிருக்லாம்...!''- அவளின் விம்மல் தணியவில்லை.

''கலா, நாங்கள் இதைப் பற்றி ஆறுதலாக கதைச்சுமுடிவெடுப்பம்... இப்ப அழாதேயும்... முகத்தைத் துடையும்...! '- மறுபடியும் தனது கைக்குட்டையால் அவளது கண்ணீரைத் துடைத்துவிட்டான் அவன்.

தனது செயல்களையெல்லாம் துடைத்து எறிந்துவிட்டால் போல் தெரிந்தது அவனது செய்கை.

''கலா, நாங்கள் மத்தியானம் வெளியில போவம்? அங்கைபோய் கதைப்பம்...!''

''சேர், நான் வரவில்லை... எனக்கு ஒரே குழப்பமாய் இருக்கு...!''

—அவள் குரலில் ஒருவகைப் பிடிவாதம் இருந்ததுபோல் தெரிந்தது.

ஒரு கணம் அவளது முகத்தையே உற்று நோக்கினான் பிரேமகாந்தன்.

''சரி, நீர் குழப்பமாய்இருக்கிறீர்... இண்டைக்கு வேண்டாம்—நாளைக்கு இதைப்பற்றிப்பேசுவோம்... சரிதானே... எங்கை கொஞ்சம் சிரியும்...!

இந்தச் சிரிப்புக்காகத்தானே உம்மை நான்...!'' வார்த்தையை முடிக்காமல் கலாவின் முகத்தைப் பிடித்து முத்தமிட்டான் அவன். இதை எதிர்பாராத கலா, சற்று நிலைகுலைந்து போனாள். அவள் சிரிக்கவில்லை...!

தன்னைச்சுற்றி ஒரு கற்பனை உலகத்தைத் தனக்குள்ளேஉருவாக்கிக் கொண்டு அதில் சுகம் கண்டு திளைத்தவள் கலா. ஆனால் இப்பொழுது அந்தக் கற்பனை உலகம் சுக்குநூறாகிப் போனதைத் தாங்கமுடியாமல் தன்னுள்ளேயே மறுகினாள்.

தான் ஓர் அழகி: தன்மீது யாரும் ஆசைப்படுவார்கள். அப்படித்தன் அழகில் பிரேமை கொண்டே பிரேமகாந்தன் தன்னை விரும்புகிறான் என்ற ஆழமான எண்ணம் அவள் மனத்தில் வேரூன்றி இருந்தது. அவன் இழுத்த இழுப்புக்கெல்லாம் அவள் ஆடினாள். அவனின் விருப்பங்களுக்கெல்லாம் வெகு தாராளமாக இடம்கொடுத்தாள். பெண் பேதை என்பது சரிதான்!

தன் அழகில் அசையாத நம்பிக்கை வைத்திருந்த கலா தான் மோசம் போகின்றாளா என்பதை சற்றும் சிந்திக்கத் தவறிவிட்டாள்.

அவளின் கட்டுக்கு மீறி வளர்ந்த இளமைக்கு ஒருவடிகால் தேவையாக இருந்தது! அதனால்-

பிரேமகாந்தன் திருமணமானவனோ அவன் எப்படிப் பட்டவனோ என்று சிறிதுகூடச் சிந்திக்க அவள் என்றுமே தன் மனத்துக்கு இடம் கொடுக்கவில்லை. பிரேமகாந்தனின் அணுகல் முறைகள் ஏனோ அவளைச்சிந்திக்க வைக்கவில்லை! அவளுடைய அனுபவமின்மையை வெகுஇயல்பாக தனக்குச்சாதகமாகப் பாவித்துவிட்டான் அவன்.

இரவுகள் நித்திரையின்றிக் கழிந்தன.

தலையைத் தாக்கிய அதிர்ச்சியினின்றும் கலா இன்னும் முற்றாக விடுபடவில்லை.

நினைவுகள் நீண்டன. அவை பயங்கரக் கனவுகளாக அக்கனவுகள் நீடித்து... அவை நிரந்தரமாகி விடுமோ என்ற பயம் அவளை வாட்டியது.

''எத்தனைக்கு எத்தனை அழகோ அந்த அழகை மேலும் அழகுபடுத்த வேண்டுமென்ற மனம் கொண்ட எனக்கு, அத்தனைக்கு அத்தனை கவனத்துடன் இருக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றாமல் போய்விட்டதே.. அவள் தன்னுள்ளே அழுகிறாள்!

உணர்வின்றித் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த தாயின் முகத்தை நோக்கினாள் கலா. சலனமற்ற நீர்த்தேக்கம் மாதிரி முகம் இருந்தது. தந்தை இல்லாமல் வாழ்க்கையின் சகல மேடுபள்ளங்களுக்கும் ஈடுகொடுத்து தன்னைப் படிப்பித்துப் பட்டதாரியாக்கி... தன்னைப்பற்றியே சதா சிந்தனை கொண்டவளாய் இருக்கின்ற தாய்...

''அவளின்ர படிப்புக்கும் வடிவுக்கும் ஏற்ற மாதிரி ஒரு புருஷன் வந்து வாய்க்க வேணும்!'' சிவபாக்கியம் கலாவைப்பற்றிப் பக்கத்து வீட்டு கனகம்மாவிடம் ஒரு நாள் பேச்சுவாக்கில் இப்படிக் கூறியதைத் தற்செயலாகக் கேட்டுவிட்டுக் கலா தனக்குள் ஒரு அலட்சியப் புன்னகையுடன் சென்றது இப்பொழுது கலாவுக்குநினைவில்வருகிறது...

''என்னைப்பற்றி அம்மா கட்டிய கனவுகள் கலைந்து விட்டனவா...

அம்மாவுக்காக கலாவின் மனம் பச்சாதாபப்பட்டு உருகியது.

பிரேமகாந்தன் தன்னை ஏமாற்றிவிட்டானே என்று நினைக்கும்போது அவள் மனம் பதறியது. மறுகணம் தான் ஏமாந்து போய்விட்டதை நினைத்தபோதுகலாவின் உடல் அருவருப்பினால் பதறிச்சிலிர்த்தது!

ஆனால் மனம் குரங்காகி...

மறுபடியும் பிரேமகாந்தனிடம் செல்கிறது கேள்விகள் ஆயிரம் பிறந்தன! ஆனால் பதிலுக்கு எங்கே போவது என்றுதான்தெரியவில்லை.

பகல் முழுவதும் அலுவலக வேலைகளில் மனம் லயித்துவிடும். இரவு சிந்தனையில் கழியும்!

பிரேமகாந்தனின் முகம் அடிக்கடிதோன்றி அவளை அலைக்கழித்தது. அவனது பேச்சுக்களிலும் சதா புன்னகை பூத்த சிவந்த உதடுகளுக்கிடையே கண்களின் குறுகுறுப்போடு இணைந்துவரும் சிரிப்பு ஒலியிலும் தன்னை இழந்து...

அவளது சிந்தனைப் பந்தலில் பூக்கும் பூக்களிலெல்லாம் அவன் தோன்றினான்,

இனிமேலாவது தனதுவாழ்க்கையில் நிதானமான நீரோட்டம் இருக்குமா?

கலாவின் சிந்தனைப் பந்தல் விரிந்தது. எதிர்காலம் பயங்கரமாக முள்ளும் கல்லும் பாம்பும் நரியும் நிறைந்த ஓர் வனாந்தரமாகத் தோன்றியது!

(வளரும்)

# எழில் கொஞ்சும் செசெல்ஸ் தீவுகள்

அலைகொழிக்கும் இந்துப் பெருங்கடலில் மிதக்கும் நல்முத்துக்கள் செசெல்ஸ் தீவுகள். அவற்றின் அழகைக் கண்டு வியக்காத உள்ளம் இருக்காது.

இத்தீவுக் கூட்டங்கள் நெருக்கடிகள் மிக்க உலகிலிருந்து வெகுதொலைவில் அமைந்து அமைதியும் அழகும் செழிப்பும் பொலிந்து விளங்குகின்றன. இத்தீவுக் கூட்டங்களில் எல்லாமாக 115 தீவுகள் உள்ளன. அவற்றுள் பெரியது மாகே. இதன் நீளம் 22 கி. மீ. அகலம் 17 கி. மீ.

இத்தீவில் வசிக்கும் மக்களுள் பெருந்தொகையானவர்கள், கலப்பு இனத்தவர். ஆதிவாசிகள், தன்சானியா, கென்யா, தமிழ் நாடு போன்ற நாடுகளிலிருந்து வந்து குடியேறியவர்கள் ஆகியோரும் வசிக்கின்றனர். இன்று பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் இங்கு குடியேற்றங்கள் அமைத்துவாழ்கின்றனர். இதனால்இனக்கலப்புப் பெருமளவில் ஏற்பட்டது. இத்தீவின் கலாசார நாகரிக வளர்ச்சிகளிலும் ஐரோப்பியரின்செல்வாக்கை நாம் காண்கின்றோம், தமிழர், குஜாரத்திகள், சீனர் ஆகியோர் வியாபார நோக்கங்களுக்காக நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்குமுன்னர் இங்கு வந்துசேர்ந்தனர்.

65 000 மக்கள் கொண்ட இத்தீவுக்கு ஆண்டுதோறும் 55,000 சுற்றுலாப்பயணிகள் வந்து செல்வம் குவிக்கின்றனர். சுற்றுலா வருமானம் செசெல்ஸின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. பெருந்தொகையினர் ஐரோப்பாவிலிருந்துதான் வருகின்றனர். பறவைகளின் இனியஒலியும், வீசும் இளந்தென்றலும், எழில்மிக்க இயற்கையமைப்பும் இப்பயணிகளைக் கை நீட்டி அழைக்கின்றன.

—செசெல்ஸ் தீவுகளில் ஒன்றான மாகேயிலிருந்து எழுதி அனுப்பியவர்:

—செல்வி. ச. கயல்விழி

# ஒலிவர் ருவிற்ஸ்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டு ஒலிவரை எதிர் பார்த்து மௌனமாக அமர்ந்திருந்தார்கள்.

★ ★ ★

டொஜரும் சார்லிபேட்சும் ஒலிவரில்லாமல் திரும்பிவந்ததைக்கண்டதும் யூதன் பெரும் கோபம் கொண்டான் ''எங்கே ஒலிவர்'' என்று ஆத்திரத்துடன் பயமுறுத்தும் தொனியில் அவன் கத்தினான்'' எங்கே அந்தப் பையன்?''

இளம் திருடர்கள் இருவரும் ஒன்றும் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

''அந்தப் பையனுக்கு என்ன நடந்தது '' என்றுகேட்டவாறு டொஜரின் சேட் கொலரில் பிடித்து ஆட்டியபடி யூதக் கிழவன் கத்தினான் ''பேசு, இல்லையெனில் உன் கழுத்தை நெரித்து விடுவேன்'' என்றான்.

''என்ன நடந்தது? பொலிஸ் பிடித்துக்கொண்டு போனது அவ்வளவுதான்'' என்று கோபத்துடன் கூறியபடி, டொஜர் தன் உடம்பில்கிடந்த அந்தப்பெரியகோட் அப்படியே கழன்று யூதனின் கையில் தங்கும்படியாக சட்டென கழற்றிவிட்டு விரைவாகப்பாய்ந்து அடுப்பில் இறைச்சி வாட்டும் முள்ளைக்கையில் எடுத்துக் கொண்டான். கிழவன் சற்றுப் பின்னால் போகாமலிருந்தால் அம்முள்ளை கிழவனின் மார்பில் ஏற்றியிருப்பான். அதே சமயம் யூதன் அருகிலிருந்த பியர் பானையை எடுத்து டொஜர் மீது வீச, டொஜர் நாசுக்காக ஒதுங்க அப்பொழுதுதான் உள்ளேவந்த இன்னொருவனை அது பதம்பார்த்தது.

உள்ளே வந்தவன் பெயர் பில்சைக்ஸ் என்பதாகும். கட்டுமஸ்தான தேகம் கொண்ட அவனுக்கு சுமார் 35 வயது இருக்கும். அவனுடைய நாயும் கூடவே வந்தது.

''அந்த பியரை என்மீது வீசியது? எவன் அது பியராய் இருந்ததால் சரியாய்போச்சு, அந்தப்பானை மட்டும் என்மீது பட்டிருக்கவேண்டும். இது வரைக்கும் இங்கு ஒருவனைத் தொலைத்திருப்பேன்.

இவ்வளவு பியரையும் யார் கொட்டியிருப்பார்கள்? பணக்கார கிழட்டு யூதனால்தான் இவ்வளவு மதுவைத்தண்ணீர் போல ஊற்றமுடியும், ஆமாம்- இதெல்லாம் என்ன? பேஜின், என்ன செய்கிறாய் ஏன் இந்தப் பையன்களை மோசமாக நடத்துகிறாய்? கிழட்டுக்கஞ்சப் பயலே. உன்னை அவர்கள் ஏன் இன்னும் கொலை செய்யவில்லையென்று தெரியவில்லை நான் அவர்களாக இருந்திருந்தால் இந்நேரம் செய்திருப்பேன்'' என்று பேசிக்கொண்டு போனான் பில்சைக்ஸ்.

(தொடரும்)

ஆசிரியர்;
வீட்டில் வாழும் ஒரு பிராணி கூறுபார்க்கலாம்?

மாணவன்;
சந்தேகப்பிராணி

ஆசிரியர்:
என்ன..?

மாணவன்;
ஆமாம், அம்மாவைப் பார்த்து அப்பா நெடுக அப்படித்தான் சொல்லுவார்.

— கதிர் மாணிக்கம்

## காவியகாலமும் நாவல் இலக்கியயுகமும்

# கற்பனைக்குக்காவியம் யதார்த்தத்திற்கு நாவல்

(முன் தொடர்ச்சி)

காவியங்களில் பாத்திரங்கள் வார்க்கப்படுகின்றன காவியம் வாசகனை அதிகம் தொல்லைக்குட்படுத்தாது; பெருமளவு வாசகரும் இருக்கமுடியாது. காவியம் தீர்ப்புக்கூறும்தன்மை பெற்றது ஆனால் நாவல் காரணம் கூறும்பண்பு கொண்டது காவியநாயகன் கற்பனைக்கெட்டாத அழகனாகவும், தன்னிகரில்லாத்தலைவனாகவும்தோன்றி நல்லறம் நிறுத்தத் தோன்றும் வீரபுருஷனாகவும் அறத்தின் நாயகனாகவும் தம்மை இனங்காட்டும் பண்பு கொண்டவன். இதனால் பாத்திர சிருஷ்டியில் கூட நாவல்காட்டும் வாழ்க்கைச் சூழலை சமுதாய வெட்டுமுகத் தோற்றத்தை மனுஷ உணர்ச்சிகளில் ஏற்ற இறக்கங்களைக்காட்டத் தவறிவிடுகின்றதெனலாம் பேராசிரியர் கெட்டில் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது

''காவியங்காட்டும் இன்ப உலகமானது ஒரு வகையான பதில் வாழ்க்கையாக உண்மையான வாழ்க்கைக்கு மாற்றுப் பொருளாக அமைந்து விடுகிறது. வறண்ட துன்பமிகுந்த நிஜ வாழ்க்கையிலிருந்து விட்டு விடுதலையாக்கித் துயராற்றுதற்குக் காவியம் உதவி செய்கிறது சுருங்கக் கூறின் வாழ்க்கைக்கு அப்பாற்பட்டதாயும் தலைமக்களின் சிறப்புக் கூறுவதாய் அறநெறிகளைக் கருத்து வடிவிற் காட்டுவதாய்ச் செய்யுள்வடிவத்தில் அமைந்து விடும்''.

இக்கூற்று காவியம் ஓரளவு சமுதாயத்திற்குச் செய்யும் பணியை மதிப்பிடுகிறது. எனலாம் இவ்விடயம் மர்ம வீரதீரசாகஸ அதியற்புத நாவல்களின் போக்குடன் ஒப்பு நோக்கி ஆராயவும் இடமுண்டு.

### நாவலும் நாமும்

நாவலாசிரியன் சமுதாயத்தைக் கூர்ந்து நோக்கிச் சித்திரிக்கும் பணியில் எவ்வெவ் வகைகளில் வெற்றி பெற்றுள்ளான் என்பதையும், அவ்வெற்றிக்குக் காலாயும்; கருவியாயுமமைந்த நாவலிலக்கியம் எத்துணை பொருத்தமானது ஊடகமாகவும் சாதனமாகவும அமைந்ததென்பதை நோக்குதல் பொருந்தும்.

நாவல் சமூகப்பார்வையோடு கலைப்பணிபுரியும் ஒரு இலக்கிய வடிவமாகும். சாதாரண மனிதனின் எளிமையான வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டு தோன்றுவதே அதன் பணி. அதன்அடிப்படைஆழமாகவும்அகலமாகவும் நம்முடைய ஆழ்ந்தஎண்ணங்களைத் தூண்டுவதாகவும் மனித சமுதாயத்தின் பொதுக்கருத்தைத் தருவதாகவும் இருத்தல் வேண்டும். வாழ்க்கையை உள்ளது உள்ளவாறு யதார்த்தத்துடன் அதன் மென்மையைக் கூறுவதாக 'நாவல்' அமைதல் வேண்டும் நாவலில் படைக்கப்படும் பாத்திரங்கள் நாம் வாழும் உலகில் நம்மைப் போல் தலை நிமிர்ந்து நடப்பவர்களாயிருத்தல் வேண்டும். அவர்களிடத்தில் நாம் அன்பு காட்டவும், வெறுப்புக்காட்டவும் கூடியவர்களாயிருத்தல் வேண்டும். நாவலாசிரியன் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டுள்ள எண்ணம் அவனை அறிந்தோ அறியாமலே இடம் பெறல் வேண்டும் வாழ்க்கைத்தத்துவம் வாழ்வியலனுபவம் என்பது உலகானுபவத்தையொட்டி நிகழக்கூடியதாக நாவலாசிரியன் அமைத்தல் வேண்டும். ஓரிரண்டு வருஷத்து நாற் பழக்க முள்ளவனுக்கும் விளங்கும்படி அனுபவத்துக் கொத்த சிருஷ்டி மேதைப்பண்புகளுடன் நாவல் அமைவதாலேயே அவனது சமூகப்பார்வை விரிந்து பரந்து விளக்கம் பெறுவதாகின்றது.

### மக்கள் நடைமுறையும்
### நாவலின் அடிப்படையும்

நாவல்களிற் காணப்படும் மாந்தர்கள் முன்னைய இலக்கியங்களிற் காணப்படாதவர்களாவர்.

''ஆட்சி உத்தியோகம், கொடுக்கல் வாங்கல் பணப்பிணக்கு, நீதிமன்றம், பாகப்பிரிவினை, குடும்பச்சண்டை முதலிய ''சின்னஞ்சிறு விஷயங்களே'' நாவலில் இடம் பெறுகின்றன. மக்கள் மனதில் தோன்றும் உணர்ச்சிகள், போராட்டங்கள். முதலியவையே புதினங்கள் முகிழ்க்கத் தக்க நிலைக்களங்களாயின'' என்று பேராசிரியர் அ ச ஞானசம்பந்தன் (இலக்கியக் கலை பக் 309) கூறுவது அதன் குணத்தைத் தெளிவிக்கிறது.

''நாவல் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் நிலைக்கண்ணாடி. வாழ்க்கையின் சிக்கல்களை அதன் உயர்வை அதன் சிறுமைகளை உலாவும் பாத்திரங்களான மனித கூட்டத்தின் சலனத்தில் அவற்றின் குணவிஸ்தாரத்துடன் சிருஷ்டிப்பதுதான் நாவல். நாவலுக்குக் கால எல்லை கிடையாது. சென்றகாலம், நிகழ்காலம், வருங்காலம் இவற்றின் நிகழ்ச்சியை மனோதர்மத்தால் சிருஷ்டியின் மேதை குன்றாமல் கற்பனை செய்வதுதான் நாவல். நாவல்வாழ்க்கையை அப்படியே முழுசாகச் சிருஷ்டிக்க முயல்கிறதுநாவல்வாழ்க்கையை அதன் பல்வேறு சிக்கல்களுடன் கொந்தளிப்புகளுடன் அப்படியே சித்திரிக்க முயலுகிறது. நாவல் மனிதனை அவனுடைய சிறுமைக்குணங்களுடன் அவனுடைய வீழ்ச்சிகளுடன், அவனுடைய தவறுகளுடன் அப்படியே மனிதனை மனிதனாக எடுத்துக்காட்டுகிறது. நாவலின் மகத்துவம் மனிதனைச் சிருஷ்டிக்கும் திறத்தைப் பொறுத்திருக்கிறது'' என்று புதுமைப்பித்தன் கூறும் வாசகங்கள் நாவலின் பண்பையும் பயனையும் விளக்கிவிடுவனவாயுள்ளன. (புதுமைப்பித்தன் கட்டுரைகள் -பக் 34, 58)

''நாவல் காட்டும் உலகமே அந்தரங்க உலகமாகும். நெஞ்சில் இரகசியமாக வைத்து எண்ணி இன்புற்றும் நினைந்து துன்புற்றும் தன்னோடு கலந்துவிட்ட பலதனிப்பட்ட செய்திகளை நாவல் விவரிக்கும்போது அது மெய்தீண்டும்புலனுணர்ச்சிக்குச் சமானமாகின்றது. நாவலில் கர்த்தாவுக்கும் வாசகனுக்கும் நேரடியான மானஸீக உறவு ஏற்படுகிறது பேராசிரியர் க. கைலாசபதி அவர்களது கூற்று நாவலின் உள்ளார்ந்த பண்பை விளக்கிவிடுகிறது.

**கனகசபாபதி நாகேஸ்வரன்**

நாவல்கள்தான் சமுதாயத்திற்கும் தனிமனிதனுக்குமிடையேயுள்ள நெருங்கிய அடிப்படையான உறவுகளை ஆய்ந்து பாத்திரங்களில் வர்க்க வேர்களைக்கண்டறிந்து உயிர்த் துடிப்புள்ள வளர்ச்சி நிறைந்த மனிதரைக் காட்டும். நாவலாசிரியன் மனிதனை அவனது சுற்றுடலில் நிறுத்திப்பற்றற்ற வகையில் அவனது உடற்பண்புகள், உளப்பண்புகள் சமூகப் பண்புகள் முதலியவற்றை விபரித்தல் வேண்டும். வகைமாதிரிக்குப் பொருத்தமான பாத்திரங்களை வகைமாதிரிக்குப் பொருத்தமான நிலைமைகளுக்கு இணங்க மெய்ம்மை குன்றாத வகையிற் சித்திரிக்க வேண்டும் வாழ்க்கையை நோக்குவதில் நாவலின் வெற்றிக்கே காரணம் அதில் சமகாலத்து மாந்தர் சரிவரச்சித்திரிக்கப்பட்டமையாகும் நாவலில் அமையும் நிகழ்ச்சிகள் நிகழத்தக்க (Realism)னவாக இருக்கும் யதார்த்தப்பண்பே நாவலுக்குத் தனிச்சிறப்பைக் கொடுத்துள்ளது.

### மனித அனுபவமே
### மாத்திரைக் கோல்

தனிமனிதரைத் தனிப்பட்ட எழுத்தாளனொருவன் வாழ்க்கையென்ற கல்லில் உரைத்துக்காட்டுவதே நாவலின் தனிப்பண்பாயிருந்தது. தனிமனிதரது அனுபவமே அதன் மாத்திரைக்கோல். நாவல் கணந்தோறும் புதுமை காட்டும் கவின் பெற்றது. இரத்தினச் சுருக்கமாகச்சொல்லின் ''நாவல் ஒரு சாதாரண மனிதனது சரித்திரம்'' எனலாம். ஆங்கில நாவலாசிரியர் பீல்டிங் [Fielding] ''ஒரு சிறந்த நாவலாசிரியன் நிகழ்ச்சிகளை நம்பக்கூடிய தன்மையின் எல்லைக்குள் அமைத்துக் கொள்வான்'' என்கிறார் 'செயின்ஸ்பரி' [Chains bury] என்பார் ''நாவலின் பொருளாகவும், உருப்பாகவும் சாதாரணமான வாழ்க்கை, வழக்கமான நிகழ்ச்சி, பாத்திரங்கள். புனைந்துரையாடல்கள் இன்னோரன்ன சில்லறையான பல்பொருட்கள் ஆகியன கதைவடிவில் இடம் பெறும்'' என்று கூறுவதில் நாவலின் பாதங்கள் வாழ்க்கையின் அடியில் ஆழ ஊன்றிய விடயம் புரிகிறது.

(அடுத்த வாரம் முற்றும்)

## வாழவைக்கும் வாழை

வாழையடி வாழையாக வந்த பரம்பரையை வானளாவப்பேசிப்புகழ்கின்ற பெரியவர்கள் தங்கள் வளவுகளில் ஓரடி வாழையாதல் வானவைத்தார்களா எனக் கணக்கெடுத்தால் குறைவு என்றுதான்குற்றம் சாட்டுதல் வேண்டும்.

வாழை ஏழை பணக்காரர், நோயாளிகள்திடகாத்திரமானவர்கள், உணவுப்பிரியர்களை உண்டிசுருக்கும் விரதகாரர் எல்லோருக்கும் உரிய அற்புதக் கனி. கன்றும் கனியுதவும். நாட்டவர் வாழ்நாளில் பல மட்டங்கள் வெடித்து நீடித்த பயன்தருவது.

உலகில் பல்வேறு நாடுகளில் பல்வேறினங்கள் உண்டாக்கி ஏற்றுமதியாவதும் உண்டு. பாரசீக மாமன்னன் இந்தியா மீது படையெடுத்து வந்த காலத்தில் கண்டவை சிறப்புமிக்க நாகரிகம், யானைப்படை வாழைப்பழம் அவனுடைய வாயில் வாழை பல, என்றோ பாழ என்றோ வந்ததாம்.

ஆபிரிக்க நாடுகள் பல வாழைத் தோட்டத்தால் நிரம்ப பணம் சம்பாதிக்கின்றன. நாம் நம் நாளாந்த தேவைக்காயினும் வாழையை நட்டுப் பயன் பெறுவதாயின் அதற்கு இன்றைய கடும் விலை கொடுக்கத் தேவையில்லை. முன்னர் ஒரு சீப்புப் பழம் விற்றவிலையில் இன்று தனியொரு பழம் விலையாகிறது. கட்டாய உணவாகிய வாழைப் பழத்தை எல்லோரும் பயன் படுத்தக்கூடியவழி கட்டையினத்து வாழையை அதிகம் நட்டுப் பயன்பெறுதலாகும்.

நன்றி:
மில்க்வைற் செய்தி

## நெஞ்சில் நிறைந்த அரசியலார் சிலர் 9

# அரசசபையில் ஜி.ஜி.
# 11 மணிநேரம்
# தொடர்ந்துபேசினார்

முதலாவது அரசாங்க சபையை 1931 ஆம் ஆண்டு தொடக்கம் 1934 ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணம் பகிஷ்கரித்தது. யாழ்ப்பாணம் வாலிபர்கள் காங்கிரஸ்இந்த பகிஷ்கரிப்பைமேற்கொண்டது இப்பகிஷ்கரிப்பினால் வடமாகாணம் பலவழிகளிலும் பாதிப்புக்குள்ளானது

கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் முப்பெரும் பிரிவில் சிறப்பாகச் சித்தி பெற்று சீமை அப்புக்காத்தாக இலங்கை திரும்பிய திரு. கணபதிப்பிள்ளை காங்கேசன் பொன்னம்பலம் இந்தப் பகிஷ்கரிப்பை விரும்பவில்லை. பகிஷ்கரிப்பினால் சிறுபான்மையினரான தமிழர்களுக்குப் பெரும்பாதகமே ஏற்படுமென அவர் கருதினார். பகிஷ்கரிப்பைக் கைவிடச் செய்வதற்கு ஜி. ஜி. இரவு பகலாக உழைத்தார்.

இச்சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பண்டித ஜவஹர்லால் நேரு தமிழ்த் தலைவர்களைப்பார்த்து ''நீங்கள் அரசாங்க சபையைப் பகிஷ்கரித்துவிட்டுக் கையாளப்போகும் மாற்று வழி என்ன?'' என்று கேட்டார்.

அதனாலும் ஜி ஜி எடுத்த முயற்சிகளினாலும் பகிஷ்கரிப்பைக்கைவிட்டு யாழ்ப்பாணத்தொகுதிகளில் இடைக்காலத் தேர்தலை நடத்துவதற்குத்தமிழர் ஒப்புக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியை திரு. க. சி. குலரத்தினம் அவர்கள் தமது 'நோர்த்முதல் கோபல்லா வரை' என்ற நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''யாழ்ப்பாணத் தமிழருக்கு ஞானோதயம் உண்டானதும் நான்கு தொகுதிகளிலும் உபதேர்தலுக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. பரமேசுவரக் கல்லூரியின் அதிபராயிருந்த சுப்பையா நடேசன் காங்கேசன்துறைத் தொகுதியில் வெற்றிபெற்றார். அரச ஈட்டு வங்கியின் அதிபராயிருந்து அதனை விலகல் செய்துவிட்டு வந் அருணசலம் மகாதேவா யாழ்ப்பாணத் தொகுதியில் வெற்றிபெற்றார். கேம்பிரிச் சர்வகலாசாலையில் முப்பெரும் பிரிவில் தீர்க்க சித்திபெற்றச் சீமை அப்புக்காத்தாகி இலங்கைக்கு மீண்டு தமிழர் ஒன்றியொதுக்கலைக்கைவிடச் செய்வதற்கு இரவு பகலாக உழைத்ததுமன்றி முன்னர் 1931-ம் ஆண்டில் மன்னார்த் தொகுதியில் தோல்விகண்ட திருவாளர் கணபதியார் காங்கேயர் பொன்னம்பலம் பருத்தித்துறைத் தொகுதியில் வெற்றிபெற்றார் தீவுப்பகுதியில் வைத்திலிங்கம் துரைசுவாமி போட்டியிட விரும்பவில்லை. அவர் அரசாங்க சபையை ஒன்றியொதுக்கல் செய்தமை அதன் முழுவைகலுக்குமே எனக்கூறி விலகி நின்றார். அத்தொகுதியில் நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளை பிரதிநிதியானார்,

''எனவே அரசாங்க சபையில் அதுகாறும் வெற்றிடமாயிருந்த ஆசனங்கள் தமிழர் பிரதிநிதிகளால் அலங்கரிக்கப் படலாயின, நால்வரும் அழகிய தலைப்பாகை நீண்ட கோட். உத்தரியம் என்பன அணிந்து சபையைச் சிறப்பித்தவர்கள். மகாதேவா காணி விவசாய நிர்வாகத்திலும், நடேசன் உள்ளூர்ஆட்சிநிர்வாகத்திலும் பொன்னம்பலம் கைத்தொழில், வர்த்தகம் தொழில் நிர்வாகத்திலும் நெவின்ஸ் சுகாதார நிர்வாக சபையிலும் இடம்பெற்றார்கள்.

தேர்தல் மூலம் நால்வர் தெரியப்பட்டு அங்கத்தவரானமை சிறுபான்மையினத்தவருக்குப் பக்கபலமாயிருந்தது. எனவே அவர்கள் இலங்கைத்தமிழர், இந்தியத்தமிழர், முஸ்லிம்கள் ஆகியோர் ஒன்றுசேர்ந்து ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்க 8-6-35ல் குடியேற்ற மந்திரியாருக்கு ஒரு விளக்கம் எழுதினார்கள். அதில் டொனமூர்த்திருத்தத்தைத் தாங்கள் ஆரம்பத்திலேயே விரும்பவில்லையென்றும் அதனால் ஒன்றியொதுக்கல் செய்தார்களென்றும் அதனால் பெரும்பான்மை சமூகத்தவர் சிறுபான்மையினருக்குப் பாதகமாகவே அலுவல்களைக் கையாண்டு வருகிறார்கள் என்றும் அரசாங்க சபை எவ்வாறாயினும் மாற்றியமைக்கப்பட நேர்ந்தால் எந்தவொரு சமூகமும் இன்னொரு சமூகத்தை நலியச் செய்து ஒதுக்கித்தள்ளாதவாறு பாதுகாப்பளித்தல் வேண்டுமென்றும் குறிப்பிட்டார்கள்''

**எஸ். எம். ஜி.**

இதனைத் தொடர்ந்துதான் திரு ஜி.ஜி. பொன்னம்பலம் சிங்களவர்களுடன் சிறுபான்மையினருக்குச் சமபலப் பிரதிநிதித்துவம் வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பினார். இந்தக்கோரிக்கைதான் பின்

(6ம் பக்கம் பார்க்க)

ஒருவர்;
எனது பிள்ளைகள் எல்லோரும் படித்தவர்கள்
மற்றவர்:
அப்படியா? என்ன படித்திருக்கிறார்கள் ?
ஒருவர்:
ஏதோ எழுத வாசிக்கத் தெரிந்தளவுக்குப் படித்திருக்கிறார்கள்.

—கதிர் மாணிக்கம்

## இந்திய ஜனநாயக வரலாற்றில்

## இன்னொரு மைல்கல்:

# ரஜீவ் நேரு பரம்பரையில் மற்றுமொரு நாயகன்

சோதனை மிகக் ஒரு கால கட்டத்தில் ரஜீவ்காந்தி அமோக வெற்றியீட்டியுள்ளார்.

பாரதத்தின் காவியத்தலைவி எனப் போற்றப்படும் அன்னை இந்திராவின் மறைவினுல் ஏற்பட்ட அனுதாபத்தினுல் இந்த வெற்றி ஏற்பட்டது என்றும் கூறுவர்.

எம் ஜி ஆர்.விஷயத்திலும் இதே அளவு கோலை வைத்து, அவரது சுகயீனத்தைக் காரணம் காட்டி அந்த 'அனுதாப'த்தினுல் அ. தி. மு. க. பெருவெற்றி பெற்றதென சாமான்ய இந்திய வாக்காளனைப் பலரும் எடை போடலாம். ஆனுல், தெலுங்கு மாநிலத்தேர்தல் முடிவுகள் சாமான்ய இந்திய வாக்காளனின் புத்திக்கூர்மையைப் புரிய வைப்பனவாக உள்ளன.

அவ்வாருயின், இந்திய மக்கள் வழங்கிய இந்தத் தீர்ப்புக்கான காரணங்கள் யாவை?

தனது சொந்த மெய்க்காப்பாளர்களின் துப்பாக்கித் தோட்டாக்களுக்கு இரையாவதற்கு முன்னர், 'இன்று நான் இறந்தால் எனது ஒவ்வொரு துளி இரத்தமும் எனது நாட்டுக்கு உரமூட்டும்'' என இந்திரா கூறியவார்த்தைகள், இன்று ரஜீவ் பெற்ற வெற்றியானது மகோன்னததேசபக்தி கொண்ட நேரு பரம்பரையின் மகத்தான பிதுரார்ஜிதத்தைப் பிரதிபலிக்கின்றது.

சர்ச்சில், டிகால், டிட்டோ, லெனின் போன்ற பிரசித்தி பெற்ற நாயகர்கள் தமக்கென ஓர் அரசியல் வாரிசை விட்டுச் செல்லவில்லை. ஆனுல் பெரு விருட்சம் போன்ற நேரு குடும்பம் சில உரமுள்ள விதைகளை உதிர்த்தது. இந்தப் பெரு விருட்ச நிழலில் இவ்விதைகள் முளைகொள்ளுமோ எனப்பலர் சந்தேகப்பட்டதுண்டு ஆனுல், அவர்களது 'ஜோஸ்யம்' பலிக்கவில்லை.

இளம்பராயந் தொட்டுத் தனது தந்தையின் அரவணைப்பில் அரசியல் சாஸ்திரத்தைக் கற்று, பற்பல அனுபவங்களைச் சந்தித்த இந்திராகாந்தி போன்ற ஒருவர்விட்டுச்சென்ற வெற்றிடத்தை, வெகு அண்மையிலேயே அரசியல் பிரவேசஞ் செய்த ரஜீவ் திறம்பட நிரப்பமுடியுமா எனப் பலர் கேட்கின்றனர்.

இந்திரா இருந்த காலத்திலேயே பல்வேறு உட்பூசல்களால் கட்டவிழ்ந்த ஒரு கட்சியின் ஐக்கியத்தைத் தைரியத்துடனும் திறமையுடனும் உறுதிப்படுத்துவதோ அல்லது மாநிலப் பிரச்சனைகளால் அமைதி குலைந்துள்ள நிலையிலுள்ள ஒரு நாட்டினைக் கட்டிக் காப்பதோ, சர்வதேச சக்திகளின் சூழ்ச்சிகளால் இந்தியாவுக்கும் அண்டை அயல்நாடுகளுக்குமிடையில் வேண்டுமென்றே உருவாக்கப்படும் ''உரசல்''களைச் சமாளிப்பதோ புதிய தலைவர் ரஜீவுக்குச் சாத்தியமாகுமா எனப்பல அரசியல் அவதானிகள் கேட்கிருர்கள்.

திருமதி காந்தியின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதில் ரஜீவ் ஏற்கனவே பிளவுபட்ட கட்சியின் முற்றுமுழு ஆதரவைப் பெறுவாரோ எனப்பலர் சந்தேகப்படுவதும் இயல்பே. இவ்வேளையில் ஊழலித்தகட்சி மற்றும் நாட்டுப் பிணிகளை 'எமர்ஜன்ஸி' என்ற ஆயுதத்தின் மூலம் 'அறுவைச் சிகிச்சை' செய்ய முயன்றமையும், அதனுலேற்பட்ட பின் விளைவுகளும் இங்கு மனங்கொள்ளத்தக்கவை.

ஆனுல் இந்தியாவைப் போன்று பலவேறு இன, மத, கலாசாரங்களைக் கொண்ட ஒருநாடு அகில இந்திய ரீதியில் ரஜீவின் தலைமைக்கு அங்கீகாரம் வழங்கியிருப்பது ஒருநல்ல சகுனமே அத்துடன் ரஜீவ் பாரதத்தை பாட்டாநேருவின் தாராளவாத ஜனநாயகப் பாதைக்குத் திசை திருப்பிச் செல்லும் 'விமானி'யை ஒத்தவராகப் படுகின்ருர். இந்திரா காந்தியின் சில போக்குகள் இத்தன்மைக்குமாறுபட்டவையாக இருந்தன என்பது பற்றி இரு அபிப்பிராயங்கள் இருக்க முடியாது.

மேலும், ரஜீவினுலும் அண்மையில் அரசியலரங்கில் பிரவேசித்த கல்விப் புலமையும் அரசியலறிவும் இணையப் பெற்ற இளம் அரசியல்வாதிகளினுலும் இதுவரை மரபுவழியாக முரண்டுப்பாங்கையும், ஜாதிரீதியான மனப் போக்குகளையும் கொண்ட பழைய காங்கிரஸினது 'கிழட்டு'த் தலைமையின் கெடுபிடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என ஒருவர் திடமாக நம்பலாம்.

வெறுமனே அரசியல் லாபத்துக்காக செயற்கையாக உருவாக்கப்பட்ட பஞ்சாப்பிரச்னை, மரபுரீதியில் பிணித்துப்போன இந்து-சீக்கிய உறவுகள் ஆகியன உட்படப் பல பிரச்னைகளை ரஜீவ் தீர்க்கவேண்டியிருக்கும். ஆனுல், இந்திராவின் மறைவு இப்பிரச்னைகளைத் தற்காலிகமாகவேனும் 'உறைய' வைக்குமென நம்பலாம்.

பல்வேறு நெருக்கடிகள், தாயாரின் மறைவு ஆகியவற்றின் மத்தியில் கூட இரண்டு மாதங்களில் தேர்தலை நடத்த வேண்டுமென ரஜீவ் எடுத்த தீர்மானம் அவரது சுயநம்பிக்கையை நன்கு வெளிக்காட்டுகிறது.

மூன்ருண்டுகளுக்கு முன்னர் குறிப்பிடத்தக்க அரசியலனுபவமின்றி ஒரு விமானியாக மட்டுமிருந்த ரஜீவ், இன்று மூன்றும் உலக நாடுகளின் தலை நாடு-கூட்டுச்சேரா இயக்கத்தின் தலைமை நாடு - என்ற 'ராட்சஸ ஜம்போ விமா'னத்தை நிச்சயம் திசை தவருது செலுத்துவார் என நம்புவோமாக!

பெரி. சண்முகநாதன்

## இரந்து வாழ்தல் இனி வேண்டாம்

ஓடுகின்ற செங்குருதி வியர்வை சிந்த
ஓயாது ஏர்பிடித்துத் தேய்ந்த கைகள்
காடுகளை வென்றுமழை வெய்யில் தாங்கிக்
கழனிகண்டு நெல்குவித்த உழவர்தம்மின்
வீடுகளில் பால்சுரந்த ஆதன்கன்றை
விரைந்து நக்கி அன்புடனே அரவணைக்க
நாடுகளில் போர்எதற்கு அன்பு பொங்க
நாமுயல்வோம் உளமார நாளும் தானே

இரந்து உயிர் வாழுகின்ற நிலைஎமக்கு
இனி வேண்டாம் சுதந்திரமாய் ஏர்சுமந்து
பரந்துபட்ட காடழித்துப் பசிப்பிணியை
பாரிருந்து நீக்குமுயர் மருத்துவனுய்
உரம்படைத்த மனவுறுதி கொண்டு இன்றே
உழவரெனும் உயர்தொழிலோ ராகிப் பஞ்சம்
நிரந்தரமாய் அழிஎனத் முயற்சி செய்வோம்
நேர்மையுடன் பாடுபடும் வாழ்வு கொள்வோம்.

—நெடுந்தீவு லக்ஸ்மன்

## நெஞ்சில்நிறைந்த

(5ம் பக்கத் தொடர்ச்சி)

னர் 'ஐம்பதுக்குஐம்பது,என்று பிரசித்தம் பெற்றது.

இலங்கையில் கவர்னராக இருந்த சேர் 'அன்றூ கல்டிகொட்' சீர்திருத்த அரசுச் செய்தி' என்ற தலைப்பில் ஓர் அறிக்கையை 13-6-1938 இல் இங்கிலாந்திலிருந்த குடியேற்ற மந்திரியாருக்கு அனுப்பிவைத்தார். இது 10-11 1983 இல் பிரித்தானிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

''ஆள்பதி அன்றூகல்டிகொட்''அனுப்பிய சீர்திருத்த அரசுச் செய்தி இதுகாறும் குடியேற்ற மந்திரிமாருக்கு இலங்கையரால் அனுப்பப்பட்ட நினைவேடுகள் போலல்லாது, ஆள்பதியவர்களால் தயாரிக்கப்பட்டதாயும் இலங்கை வாழ் சமூகத்தவர் எல்லோருடைய அபிப்பிராயங்களையும் கொண்டதாயும் இருந்தது. அது ஓராள் ஆணைச் சபையின் அறிக்கையெனவும் கூறப்பட்டது'' என்று திரு. க.சி.குலரத்தினம் 'நோத்முதல் கோபல்லவாவரை' என்ற நூலில் எழுதுகிருர்.

### ஐம்பதுக்கு ஐம்பதை

### விரும்பவில்லை


கவர்னர் கல்டிகொட் குடியேற்றமந்திரிக்கு அனுப்பி வைத்த 'சீர்திருத்த அரசுச் செய்தி'யில் ஐம்பதுக்கு ஐம்பது எனப்படும் சமபல பிரதிநிதித்துவமுறையில் வேலையில்லை; அதுவிரும்பத்தக்கதன்று'' என்று குறிப்பிட்டிருந்தார்.

கவர்னர் கல்டிகொட்டின் இந்தச் சீர்திருத்த அரசுச் செய்தி இலங்கையிலும் பிரசுரிக்கப்பட்டு அரசாங்க சபையிலும் பலநாட்களாக விவாதிக்கப்பட்டது.

இந்தச் சீர்திருத்தங்களைக் கொண்ட பிரேரணைகளை 1939 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் தேதி சட்டச்செயலாளர் கௌரவ ஜே ஸி. ஹோவார்ட் கே.ஸி? அரசாங்க சபையில் சமர்ப்பித்தார்.

இதன் மீது பல நாட்கள் விவாதம் நடைபெற்றது. இந்தவிவாதத்தில் கலந்து கொண்டு திரு.ஜி ஜி பொன்னம்பலம் பதினெரு மணிநேரம் பேசினுர். அரசாங்க சபைச் சரித்திரத்தில் அதற்கு முன் 1915 ஆம் ஆண்டு வகுப்புக்கலவர சமயத்தில் சேர் பொன இராமநாதன் தொடர்ச்சியாக ஒன்பது மணிநேரம் பேசி ஒரு சாதனையை நிலைநாட்டியிருந்தார். அந்தச் சாதனையை திரு ஜிஜி இப்போது முறியடித்துப் பதினெரு மணிநேரம் பேசினுர். இந்த விவாதத்தில் திரு.ஜிஜி தமது சமபலப் பிரதிநிதித்துவ கோரிக்கையை கவர்னர் ஐம்பதுக்கும்பது என்று குறிப்பிட்டதை ஆட்சேபித்தார்.

[மிகுதி அடுத்தவாரம்]




கூசுகிற கண்ணேடு வெயிலைப் பார்த்துக்
'கோதாரி வெய்யில்' எனத்திட்டும் தாத்தா
ஆசைக்கும் ஒரு வெய்யில் எறிக்காதாடா
ஆண்டவனே' என்கின்ற மாரிகாலம்.

மழைகேட்டுத் தவம் செய்த கமக்காரர்க்கே
மனம் விட்டுப் போகின்ற மாரிகாலம்
அழையாத இடமெல்லாம் நுழைந்தே வெள்ளம்
ஆர்ப்பாட்டஞ் செய்கின்ற மாரிகாலம்

கொசுவுக்கு வலைவீசி விடியும் மட்டும்
குறண்டிக் கொண்டு உறங்குகிற மாரிகாலம்
வசுவுக்கு நிற்கின்ற இடங்கள் எல்லாம்
வாய்க்காலாய்த் தெரிகின்ற மாரி காலம்

வடைகொண்டு வருகின்ற வெள்ளைச்சாமி
வள்ளத்தைத் தள்ளுதல்போல் சைக்கிள் தள்ளி
குடைகொண்டே இளகாமல் முறுக்கைக் காத்துக்
கூதலுடன் போகின்ற மாரிகாலம்.

சேறள்ளி எறிகின்ருர் செருப்பார் என்று
சினத்தோடே கழற்றி அதைக் கையிற்போட்டு
வாருரே இடைவேளைக் கடலைக்காரர்
வந்ததடா பள்ளியிலும் மாரிகாலம்

தப்புத் தண்ணீருக்குட் பந்தைப்போட்டுத்
தட்டிக்கொண்டு ஓடுகிற தம்பிமார்கள்
தொப்பென்று விழுந்தாலும் சேற்றைத்தட்டித்
துள்ளிக்கொண்டு ஓடுகிற மாரிகாலம்

பள்ளிக்கு வந்தாலும் மனம் இல்லாமல்
பாடத்தைப் படிக்கின்ற மாரிகாலம்
வெள்ளனவே மணிபடிக்க வெளிக்கிட்டோடி
வெள்ளத்தில் விளையாடும் மாரி காலம்

மழைக் கோட்டால், புத்தகத்தை மட்டும் மூடி.
மகிழ்வண்ணன் நனைகின்ற மாரிகாலம்.
குடைகேட்டு வாங்கா சங்கர்,ரேயிங்
கொப்பியினுற் குடைசெய்யும் மாரிகாலம்

தவளைக்கு நாம்போட்டி என்பார்போலத்
தம்பியர்கள் நனைகின்ற மாரிகாலம்

தவிலோடு கடம் சேர்த்துச் சுரமும்பாடித்
தவளையர்கள் மகிழுகிற மாரிகாலம்

வாங்கினிலே இருந்தவுடன் தூங்கும்வாசு.
வடிவாகப் படிக்கின்ருன் என்றேஆசான்
ஏங்குகிருர், அய்யையோ பையன் காலில்,
ஏழெட்டு நுளம்பிருக்கும் மாரிகாலம்

வெளுத்து, இன்றுதான் போட்ட வெள்ளைச்சேட்டில்
வீசுகிருர் சேறள்ளப் 'பாட்டா' என்று
கழற்றித்தான் கழுவத்தான் குனியும்போது
கனத்தமழை தோய்க்கின்ற மாரிகாலம்

'பாட்டா'வைச் சாட்டாகப் பேரன்மார்கள்
பள்ளிக்குப் போகாது திரும்பக்கண்டு
பாட்டாமார் சிரிக்கின்ற மாரிகாலம்
பாட்டுக்கும் பதமான மாரிகாலம்

கீறிவைத்த படத்தினிலே தண்ணீர் ஊறக்
கிறுதபடந் தெரியும் மாரிகாலம்
மாறிவைத்து 'இதுசேர் என் மொடேன் ஆட்' என்று
மதிப்பெண்ணும் வாங்குகிற மாரிகாலம்


## அதி அற்புத அழகி!

அவள் ஒரு
அதி அற்புதமான அழகி!
எங்கள் பாஷையில்
''குண்டுக் கோப்பை
கணிசம்
நல்லசோக்கான
வெள்ளைப் பெட்டை''
அவள் பேசினுல் தேன்!
பார்த்தால் மீன்!
ஓடினுல் மான்!
ஆனுல் ... ...
அவள் தலையிலோ
நிறையப் பேன்!
அவள் ஒரு
அதி அற்புதமான அழகி!

—குமார் தனபால்

# சிவநெறிச் செம்மல்

## முதலியார் சின்னத்தம்பி



ஆளும் அழகர்; கருத்திலும் ஆழம் எழுத்திலும் அழகு சித்தமும் அழகியார், எழில் நகைகொண்டு எல்லோரையும் நேசிக்கும் இனியபண்பாளர் திருமுறைகளில் உறைப்பான பக்தி சிவநெறி ஒழுங்கில் தளப்பமற்ற உறுதி காந்தியக் கொள்கையில் கட்டற்றபற்று. புதுமை வேட்டலில் ஒரு புரட்சிச்சிந்தனையாளன். அண்மையில்சிவப்பேறெய்தியஅண்ணல் முதலியார் செ. சின்னத்தம்பி அவர்களை நினைத்ததும் அவரோடு இணங்கியிருந்த அன்பர்கள் உள்ளத்தல் ஒளிரும் காட்சிகளே மேற் கூறியவை.

வட்டுக் கோட்டையில் பிறந்து யாழ்ப்பாணக் கல்லூரி குறித்து வைத்துக்கொள்ள வேண்டிய சேவை நலன்களாகும்.

திரு. முதலியார் அவர்கள் சிறந்த சொற்பொழிவாளர், தேர்ந்த எழுத்தாளர். ஒரு முறை யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற சேக்கிழார் விழாவிற்கு தென்னகத்திலிருந்து அழைக்கப்பட்ட பேச்சாளர் பிரயாணத் தடங்கலால் விழாவின் முதல்நாள் வரை வரவில்லை இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் அவருக்குப் பதிலாக - அவருடைய இடத்தை ஈடுசெய்ய யாரைக் கூப்பிடலாம் என்று விழாச் சபையினர் யோசித்தனர். முதலியார் சின்னத்தம்பி அவர்களே பொருத்தமானவர்

வெளியிட்ட ஈழத்தில் யான் கண்ட சொற்செல்வர்கள் என்னும் நூலில் முதலியார் அவர்களும் இடம்பெற்றிருக்கிறார் என்பதனை நினைவூட்டக் கடமைப்பட்டவன்.

**"ஆளும் அழகர்; கருத்திலும் ஆழம்; எழுத்திலும் அழகு: சித்தமும் அழகியார்; எழில்நகைகொண்டு எல்லோரையும் நேசிக்கும் இனிய பண்பாளர்."**

யில் ஆரம்பப்படிப்பையும்; இலங்கைப் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பானஇன்ரர் சயன்ஸ்சையும் முடித்து சிவில் சேர்விஸ் உத்தியோகத்தராயிருந்து ஒய்வு பெற்றவர். அரசாங்க உத்தியோகத்தில் மட்டுமே ஓய்வு பெற்ற இப்பெரியார் சமய சமூக உத்தியோகத்தில் ஓய்வெடுக்காத கடும் உழைப்பாளியாய் திகழ்ந்தவர். வட்டுக்கோட்டை கிராம சபைத்தலைவராகவும். ஈழத்து அருள் நெறிமன்றத்தலைவராயும் சைவ சித்தாந்தமன்றத் தலைவராயும், காந்தி சேவா சங்கத்தலைவராயும் விளங்கி இப்பெரியார் ஆற்றிய பணிகள் சமய சமூகத்துறைகளில்

என்ற முடிவுக்கு வந்தனர். அன்றிரவே அவரைக்கண்டு ஒழுங்குசெய்ய என்னையும் கூட்டிக்கொண்டு வட்டுக்கோட்டைக்குச் சென்றோர்கள். நாங்கள் போன நேரம் முதலியார் அவர்கள் தன்னுடைய 'குஞ்சிதசரணம்' என்னும் இல்லத்தில் படுத்துக் கிடந்து படித்துக்கொண்டிருந்தார். சிறிது உடல்நலம் குன்றியிருந்தது. கண்பார்வையிலும் பிரகாசம் குறைந்த வேளை எங்கள் திடீர்அழைப்பை எந்த மறுப்பும் கூருது ஏற்றுக் கொண்டார்கள்.

இரண்டாம்நாள் இரவு சேக்கிழார் விழாவில் முதலியாரின் சேக்கிழார் குறித்த சொற்பொழிவு இந்தியப் பேச்சாளர்களையும் மிஞ்சி நின்று பாராட்டைப்பெற்றது. நான் எழுதி

### குன்றக்குடியாரிடம்

### பெரும் பற்று

முதலியார் அவர்கள் தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அருள்நெறி இயக்கத்தில் பெருத்த ஈடுபாடும் அடிகளார் இடத்தில் பெரும்பற்றும் கொண்டிருந்தார். இதனாலே தனது வீடொன்றிற்கு குன்றக்குடி என்றேபெயரிட்டிருந்தார் சைவத் திருமுறைகள் ஆலயங்கள் தோறும் இல்லங்கள் தோறும் ஏறியும் எழுந்தும் நிற்பதற்கு குன்றக்குடி அடிகளார் தொண்டாற்றியமை முதலியாரை வெகுவாகக் கவர்ந்தது. இது தொடர்பாக முதலியார் அவர்கள் ஓரிடத்தில் கீழ்க்கண்டவாறு எழுதினார்.

"சைவத்திருமுறைகளே சைவசித்தாந்தச் செந்நெறியாம் சைவத்தின் உயிர், திருமுறைகளில் தேங்கிக்கிடக்கும்-செங்கணவன்பால், திசைமுகன்பால், தேவர்கள் பால், எங்குமில்லாக இன்ப அநுபவமே சைவத்தின் இலட்சியம். இத்திருமுறைகளைக்காதலாகிக்

ருப்பசை சைவஉலகம் கண்டு ஒன்று பாய்ந்தாற்போன்று களிக்கின்றது. அடிகளாரது உயிரளிக்கும்

ஆம்பலும் நெய்தலும் தாமரையும் செங்கழுநீரும் கொழுகொளென வளர்ந்து ஆயிரம் ஆயிரம் மலர்களைப் பூத்து ஒளிரும் ஒரு எழில்மிகு அருள்நெறிச் சொற்பொழிவு வெள்ளம் பாய்ந்ததும் திருமுறையன்பும், ஆர்வமும் பொங்கிப் பொலிவதைக் காண்கின்றோம்".

புலவர் ஈழத்துச் சிவானந்தன்

கசிந்து கண்ணீர் மல்கி ஓதி ஓதி உள்ளத்தையும் உயிரையும் பண்படுத்தும் பக்திச் செயலே சைவத்தின் தலைசிறந்த சாதனம். இவ்வுண்மைகளைச் சைவ உலகம் ஒரு காலத்தில் உணர்ந்திருந்தது; காலகதியில் மறந்துவிட்டது. பொருள் தெரியாத - பொருள் உணராத- வெற்றுச்சடங்குமயமாக வறண்டு கிடக்கின்றது நமது சமயம் இந்த நிலைமையில் குன்றக்குடி அடிகளாரது புனிதப்புரட்சி பெரும்பயனை அளித்துவருகின்றது.

தென்னாட்டில் திரண்டெழுந்த நாத்திக நச்சியகத்து விபரீத விளைவுகளின் வேகத்தையெல்லாம் அடிகளாரது திருமுறைத் தெள்ளமுத அருள்நெறிப்பிரசாரம் தணித்து வருவது யாம் அறிந்ததே நாத்திகக்கெடுநெறியில் அடிவைத்த ஆயிரக்கணக்கா இளைஞர்களை ஆத்திக அருள் நெறிக்குத் திருப்புமாறு தடுத்தாட்கொண்ட தனிப்பெருமையும் அடிகளாருக்கேயுரியது. தெய்வத் திருநூல்களையெல்லாம் தீயிலிட்டுப்பொசுக்குவோம், தெய்வத்திருவுளங்களையெல்லாம் சிதறச்சிந்துவோமென்று முழங்கியெழுந்த நாத்திகக் கூட்டங்கள் யாவும் திருமுறைகள் விளம்பும் சமயமே சைவசமயமென்றால் நாமெல்லாம் ஆத்திகர்கள்-சைவர்கள் என்று சொல்லுமளவிற்கு, அடிகளாரது அருள் நெறிப்பிரசாரத்தின்விளைவாக ஓர் அரிய அற்புதம் நிகழ்ந்தி

தடாகம், ஒருகால் கடுங் கோடையின் விளைவாக ஒட்டி உலர்ந்து கிடக்க; அதனுள ஒரு ஜீவநதி பாய்ந்தால் எவ்வாறு மீண்டும் அத்தடாகம் கவினெழுகு மலர்ச்சிபெற்று விளங்குமோ அவ்வாறே தெய்வத் திருமுறைகள் மீதுள்ள பற்று அறவே அழிந்துபோன எங்கள் நாட்டில், ஜீவநதி

முதலியார் அவர்கள் தமிழுக்கும் சைவத்திற்கும் சமூகத்திற்கும் ஆற்றிய தொண்டுகளின் தொடர்கள் இனி வருங்கால இளைஞர்களால் இட்டு நிரப்பப்படுமானல் அவர்களுடைய ஆசியும் வாழ்த்தும் கிடைப்பது சத்தியத்தில் சத்தியம். அன்னருடைய ஆன்மா சிவப்பேறெய்தி மகிழ சிவபரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

# பகற்கனவே

# பலித்துவிடுகிறது!

சுதந்திர இலங்கை பௌத்த சிங்களமக்களுக்கே சொநதமென்று நம்புபவர்கள் கனவு உலகத்தில் வசிப்பவர்களென்று கொள்ளலாமா?

அல்லது இது பைத்தியம்; இவர்கள் மனநோய் நிலையத்தில சிகிச்சைபெறவேண்டியவர்கள் என்று பரிகாசம் செய்யலாமா?

இந்தக்கொள்கையை ஆதரிப்பவர்கள், இங்கு வாழுப தமிழர், இந்துக்கள், கிறீஸ்தவர்கள், முஸ்லீம்கள் ஆகியோர் இந்தநாட்டில் வாழலாம் என்பதை அனுமதிப்பவர்கள்; ஆனல் அவர்கள் ஒரு அங்குல நிலத்துக்கும் உரித்தானவாகள் அல்ல என்ற கருத்தும் ஒலிக்கிறது.

உண்மை என்ன? இலங்கையை தங்கள் நாடென்று கொள்ளும் தமிழரும் மற்றைய சமூகத்தவரும் சிங்கள மக்களைப்போல், பௌத்தசிங்களமக்களைப்போல் இந்த நாட்டுமக்களே.

இவர்கள்யாவரும் சொந்தநன்மையை முன்னிட்டு ஒன்றுபட்டிருந்து வாழ்ந்தாகவேண்டும்.

ஒன்றுபடுதல் எவ்வாறு என்பதை நன்றாக உணர முடியாத ஆட்சிகள் அனைத்தும் 37வருட சுதந்திரவாழ்வில் தமிழ் மக்கள் இந்த நாட்டில் எவ்வாறுகணிக்கப் படவேண்டுமென்பதை அறியவல்ல அரசியல் ஞானமில்லாதவையே.

இதனைப் பிரதிபலிப்பதே இன்றைய தமிழ்இளைஞர் ஆயுதப்போராட்டம்: அதனை எவ்வாறு கணித்தாலும் கூறினாலும், கடந்தகால, கழித்து விடப்பட்ட இன, மொழி,மத தீவிரவாதம் மீண்டும் தலையெடுக்குமென்று நம்பஇடமில்லை.

காலத்துக்குக்காலம் ஒரு ஆர். ஜீ. சேனநாயக்கா, எவ். ஆர். (குளுக்கோஸ்) ஜெயசூரியா, வெளிமடை கே. எம் பி ராஜரத்தின, இன்றைய முன்னைநாள் சிரேஷ்ட அமைச்சர் சிறில் மத்தியூ இக்கொள்கையை மேடையில் நடித்து வெளியேறுகின்றனர்.

ஜனதிபதி றீகனைப் போலத்தாமும் ஒரு நடிகன் என்று சொல்லுபவர் ஜனதிபதி அவர்கள். இந்தக் கட்டத்தில் ஒரு துன்பியல் நாடகத்தின் கதாநாயகராக வரலாற்றில் ஒருவடு ஏற்படும் வண்ணம் அவர் நடிக்க உடன்படமாட்டாரென்று நம்பலாம்.

கனவுகளிலும் இரண்டுவகை; பகல் இரா இவை இலகுவில் நனவாகா; இருப்பினும் மகாத்மாவின் இந்தியாவில் பகற்கனவாக இருந்த பாகிஸ்தான் நேருவின் ஆட்சியில் நனவானதை ஆரறியார்.


லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

றீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
விஜயகாந், விஜி, நம்பியார் நடிக்கும்
பி. எஸ். வீரப்பாவின்
சாட்சி


## 1வது ஆண்டு நினைவஞ்சலி

### வெற்றிவேலு செல்லத்துரை இலட்சுமிப்பிள்ளை (ஐயக்கோன்)

(ஓய்வுபெற்ற ஆசிரியை)



பிறப்பு: 11-3-22

இறப்பு: 20-01-84

எங்களை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புச் செய்வமே! உங்கள் ஆத்மசாந்திக்காக கண்ணீர் அஞ்சலிசெலுத்தி பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் வருந்தும்
கணவன், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
"இலட்சுமி வாசம்",
உடுவில் கிழக்கு, சுன்னுகம். 1424


எல்லாநாடுகளுக்கும் செல்வதற்கான
சகல பிரயாண ஒழுங்குகளும்
செய்துகொடுக்கப்படும்
பேர்ளின் (BERLIN) செல்வதற்கு
ரூ. 14.500/00 — நிகர (Nett)

அமெரிக்கன் லொயிட்
(சிலோன் வரையறுக்கப்பட்டது)
AMERICAN LLOYED
CEYLON LTD.

151, தர்மபால மாவத்த
கொழும்பு-07
தொலைபேசி;
20344, 26911, 28347

W-4, 5ம் மாடி
சிலிங்கோ ஹவுஸ்
கொழும்பு-1, தொலைபேசி:
24494, 28892, 29806

பிரயாண ஒழுங்கு பிரதிநிதிகள்
யாழ்ப்பாணம்;- பொதுமுகாமையாளர் வின்ஸர் திரையரங்கம்
ஊர்காவற்றுறை:- திரு. S. A. E. இரட்ணராஜா
சில்லாலை:- வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி
பருத்தித்துறை:- வண. S, S. கருணைராஜ், மெதடிஸ்ற் குருஸ்தானம்,
1375

## தகர்த்தப்பட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைப்பொங்கல் தினமான கடந்த திங்கட்கிழமை அதிகாலை யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பகுதிகளுடன் நெல்லியடி பருத்தித்துறைப் பகுதிகளை இணைக்கும் ஐந்து பிரதானவீதிகள் குண்டுகள்வைத்துத் தகர்க்கப்பட்டதால் இப்பாதைகளில் போக்குவரத்துச் சேவை ஸ்தம்பிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே. [மா]

## வெளிநாடுகளுக்காக

# இந்திய பாதுகாப்பு இரசியங்களை உளவுபார்த்த 7 அதிகாரிகள்

[புதுடில்லி]

இந்தியாவின் பாதுகாப்பு இரகசியங்களை வெளிநாடுகளுக்குத் தெரிவிப்பதில் துணைபுரிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் இந்தியாவில் 7 உயர் அதிகாரிகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்

கைதுசெய்யப்பட்டவர்களில் மூவர் பிரதமரின் செயலகத்திலும், இருவர் பாதுகாப்பு அமைச்சிலும் உயர் பதவி வகித்தவர்கள். ஏனைய இருவரும் வர்த்தகத் துறையில் பதவி வகித்தவர்கள்

### செயலாளர் ராஜினாமா

இந்தியப் பிரதமர் திரு ரஜீவ் காந்தியின் பிரதம செயலாளர் திரு அலெக்சாண்டரின் அந்தரங்க செயலாளர் டி கே பேர் என்பவரும் கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவராவர்.

இதனைத் தொடர்ந்து இந்தியப் பிரதமரின் செயலாளர் திரு. அலெக்சாண்டர் தமது பதவியை ராஜினாமாசெய்துள்ளார். அலெக்சாண்டர் முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் செயலாளராகவும் பணியாற்றியவர். இவர் கேரள மாநிலத்தைச் சேர்ந்தவர்.

இந்த 7 பேரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர். தற்போது இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி அமைச்சரவை அதிகாரியின் மட்டத்தில் ஏற்படுத்திய புதியமாற்ற நடவடிக்கைகளின்போது இந்த 7 பேரும் வெளிநாட்டுக்காக உள்நாட்டில் வேவு பார்த்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்கள் கைதுசெய்யப்பட்டமை பற்றி நேற்றுமுன்தினம் பிரதமர் ரஜீவ்காந்தி லோக்சபாவில் பேசுகையில் குறிப்பிட்டிருந்தார். (சூ)

## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை குமாரசுவாமி (சாமி)

சங்கானை அரசடி வைரவ கோவிலைச் சேர்ந்தவரும், இளைப்பாறிய இந்தியன் ஓவசியஸ் வங்கி பிரதம சிருப்பருமான அப்பாத்துரை ஐயர் குமாரசுவாமி 18-1-85ல் காலமானார். இவர் வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கணேசராஜா சின்றெக்ஸ் கொழும்பு, ஞானராஜா சேFப்றி றவல்ஸ் கொழும்பு, நிர்த்தனராஜா சாம்பமூர்த்தி அன் கொம்பனி கொழும்பு. ஜீவாம்பிகை, ஆனந்தராஜா, கமலராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சங்கானையைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பாத்துரை தம்பதிகளின் அன்பு மகனும், இருபாலையைச் சேர்ந்த காலஞ்சென்ற காசுலிங்கம் உபாத்தியாயர் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (20-1-85) காலை 9மணிக்கு கோப்பாய் கற்பகவிநாயகர் ஒழுங்கையிலுள்ள இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக இருபாலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றாரும், உறவினர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். தகவல்: கணேசராஜா இருபாலை,கோப்பாய்.

1446

## மரண அறிவித்தல்

### செல்வி யோகதேவி தணிகாசலம்

வண்ணார்பண்ணை, ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த செல்வி யோகதேவி தணிகாசலம் 9-1-85ல் காலமானார். இவர் திரு தணிகாசலம் (இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்) காலஞ்சென்ற திருமதி பத்மாவதி அவர்களின் அன்புமகளும், பத்மநாதன் (இளைப்பாறிய இலங்கை வங்கி உதவி முகாமையாளர்), சண்முகநாதன் (பிரதம லிகிதர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு, கரவெட்டி), சுதிர்காமநாதன் (உப அதிபர்,யாழ் பெரியபுலம் மகாவித்தியாலயம்), இரகுநாதன், திருமதி உஷாதேவி ஆலாலசுந்தரம் (மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி), பஞ்சநாதன் (இந்தியா) Dr ஆறுமுகநாதன் (லண்டன்), ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி கனகாம்பிகை, இந்திரா, கருணாதேவி, திரு. ஆலாலசுந்தரம், (Bursar, யாழ் பல்கலைககழகம்), திருமதி நந்தினி (லண்டன்) ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 20-ம் திகதி பிற்பகல் 2 மணியளவில் 17/7, ஐயனார் கோவிலடி இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றாரும், உறவினரும், நண்பர்களும் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்

1448

## மரண அறிவித்தல்

### மு. செல்லத்துரை [அம்மான்]

கில்னர் லேன் 424/1ச் சேர்ந்த முருகேசு செல்லத்துரை [அம்மான்] காலமானார் இவர் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும், யாழ்ப்பாணம் அரசாங்க நில அளவையாளர் சுப்பிரமணியத்தின் அன்புத் தந்தையும், திருமதி பாக்கியலட்சுமியின் மாமனாரும், தனபாலன், சந்திரகாந்தன், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பேரனுமாவார் அன்னாரின் ஈமக்கிரிகைகள் 20-1-1985 பிற்பகல் 3 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

சு. தனபாலன்
(1447) 424/1, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### இளையதம்பி கனகசபை

வேலணை மண்கும்பானைச் சேர்த்த திரு. இளையதம்பி கனகசபை காலமானார். இவர் சவுந்தரத்தின் அன்புக் கணவரும், யாழ் மாவட்ட உதவி சுங்க சேகரிப்பாளர் கணேஷ் அவர்களின் சிறிய தந்தையும், திருமலரின் (விரிவுரையாளர், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்), மாமனாரும், ரவீந்திரன் [மருத்துவ பீடம் யாழ் பல்கலைக்கழகம்], சாந்தினி [விஞ்ஞான பீடம் யாழ் பல்கலைக்கழகம்]. சிவாஜினி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி. யாழ்ப்பாணம்],சரவணபவன் [யாழ் பரியோவான கல்லூரி] ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை [20·01·85] பிற்பகல் 2-00 மணியளவில் மண்கும்பானில் நடைபெறும்.

தகவல்: செ. கணேஷ், உதவி சுங்க சேகரிப்பாளர், யாழ்ப்பாணம்.

1445

## கிளிநொச்சிவரை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுத்தியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதனால் இப் பாதைகள் திருத்தும்வரை கிளிநொச்சி வரையுமேசகல போக்குவரத்து சேவைகளும் நடைபெறும்

அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான உணவு, எண்ணெய் விநியோகமும் இதனால் தடைப்பட்டுள்ளது என்றும் இப்பகுதி மக்கள் பரிதும் பாதிககப்பட்டுள்ளனர்என்றும் அரசு தெரிவித்துள்ளது.

## இடமாற்றம்...

[1ம்பக்க தொடர்ச்சி]

சிலிருந்து திங்கட்கிழமை வெளியிடப்படுமென்று தெரிவிக்கப்கிறது.

இடமாற்றத்திற்கான ஆசிரியர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம்பெறவுள்ளன.

யாழ் மாவட்டத்திற்கு சுமார் 30 பேர் இடம்பெறுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது (மா)

## ஜனாதிபதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

துக்கட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை இந்த முன்னணி நிராகரித்ததை திரு. அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டினார்.

இந்த பிரச்னை குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுடன் தமது அரசு இனிப் பேச்சுவார்த்தை எதனையும் நடாத்தமாட்டாதென்றும், தேர்தல்கள் நடக்கவுள்ள வட, கிழக்குப் பகுதிகளிலிருந்து தோந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுடன்தான் மேற்கொண்டு ஆலோசனை நடத்தப்படுமென்றும் திரு. ஜெயவர்த்தன கூறியிருப்பதுபற்றியும திரு. அமிர்தலிங்கம் வருத்தம் தெரிவித்தார்.

இத்தொகுதியிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி ஊழியர்கள்பலர் இப்போது காவலில் இருப்பதாலும், பல தமிழர்கள் தங்கள் வீடுகளிலிருந்தும் வெளியேறிவிட்டதாலும் இங்கு நியாயமான தடை ஏதும் இல்லாதவகையில் தேர்தல்கள் நடாத்துவது சாத்தியமாக இருக்காதுஎன்று திரு அமிர்தலிங்கம் கூறினார்.

தமிழ் தீவிரவாதிகள் கொல்லப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கும் சபீபத்திய அரசின் செய்திகளையும் திரு. அமிர்தலிங்கம் மறுத்துள்ளார்.

## மன்னார்

# செபஸ்தியார் திருவிழா சோகமயம்

[மன்னார்]

மன்னார் தேவாலயத்தில்வழமையாக மிக விமரிசையாகக் கொண்டாடப்படும் செபஸ்தியார் திருவிழா இன்று மிகச் சோகத்துடன் கொண்டாடப்படுகின்றது.

தேவாலயத்தில்மக்கள்வெள்ளைக்கொடி ஏற்றியுள்ளனர். இன்றையதிருவிழாவில் கலந்துகொள்ளும் மக்கள் வெள்ளை உடையும் கறுத்த பட்டிகளும் அணிந்து கொள்வார்கள்.

மன்னாரில்வங்காலையில் அண்மையில் பங்கு குருவானவர் மேரி பஸ்ரியன் கொலையுண்டதினால் ஏற்பட்ட அதிர்ச்சி இம்மக்களை வாட்டிவருகின்றது.

## எம் ஜி.ஆர்..

(1ம் பக்கத் தொடர்ச்சி]

தற்போதைய நிலவரப்படி முதலமைச்சர் அடுத்த மாதம் 2-ம் திகதி அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு 4-ம் திகதி சென்னைவந்து சேருவார் ஆயினும் அவர் எந்தத் திகதியில் முதலமைச்சராக பதவி ஏற்பார் என்பது இன்னமும் முடிவாகவில்லை'' என்றார்

முதலமைச்சர் தமிழ்நாடு திரும்பியதும் கொடைக்கானலில் ஓய்வு எடுப்பார் என்று முன்னர் வெளியானசெய்திதவறானவை என்று குறிப்பிட்ட அமைச்சர் முதலமைச்சர் ஓய்வு எடுக்க வேண்டிய நிலையில் இருக்கின்றபோதிலும் அவர் தாயகம் திரும்பியதும் அரசியல் தலைமையை கவனிக்கும் அளவுக்கு சுகமடைந்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை முதலமைச்சர் திரு. எம் ஜி. ராமச்சந்திரன் ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும் இருப்பதாக சென்னையில் நேற்று வெளியிட்ட அரசசெய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. [சூ]

## இராணுவத்தினர்..

[1-ம் பக்க தொடர்ச்சி]

சந்தித்து தற்போதைய காலத்தில் நீர் இறைக்கும் இயந்திரத்தின் தேவையை எடுத்துக்கூறியதைத் தொடர்ந்து தொழிற்சாலையின் ஒரு பகுதியை ஒதுக்கிக்கொடுத்துள்ளார் தொழிற்சாலையின் ஒரு பகுதியில் இராணுவத்தினர் தொடர்ந்து இருப்பார்கள்.

## படகில்சென்ற..

[1-ம் பக்க தொடர்ச்சி]

இப்படகிலிருந்து 10 கிலோகிராம் சஞ்சாவும் பல ஆயுதங்களும் வெடிமருந்துகளும் தமிழ்விடுதலை இயக்கத்தின் துண்டுபபிரசுரங்களும் படகுகளுக்கு பாவிக்கும நான்கு மோட்டார் இயந்திரங்களும் கைப்பற்றப்பட்டது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது [சூ]

## இலங்கைப் பிரச்னை: ராஜ்யசபா விவாதிக்கும்

[புதுடில்லி]

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து வரும் வியாழக்கிழமை ராஜ்ய சபாவில் விவாதிக்கப்படுமென்று துணைத் தலைவர் ஜனப் ரஹ்மத் அலி நேற்று சபையில் தெரிவித்தார்.

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை மின்எறிஞ்சான் திருவிழா எனப்படும் தை அமாவாசைத் திருவிழா நடைபெறும்.

## பஸ்மீதுதுப்பாக்கி ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செட்டிகுளத்தைச் சேர்ந்த இராஜதுரை செல்லம்மா (வயது 65) என்ற மூதாட்டி பலியானார். பஸ்ஸில் பயணம்செய்த பலரும் படுகாயமடைந்துள்ளனர்.

கந்தையா குமாரசுவாமி (65 வயது, சிவபாதசுந்தரம் (40 வயது), பொன்னம்பலம் பொன்னுத்துரை (40 வயது), கதிரமலை செல்வமலர் (32 வயது) இவரது குழந்தை உட்பட 10சுகும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்கள் தற்போது கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்த மூதாட்டியின் சடலமும் ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

சடலத்தையும் காயமடைந்தவர்களையும் இராணுவத்தினரே ஆஸ்பத்திரியில் கொண்டுவந்து சேர்த்தனர்.

### வீடுகள் தீக்கிரை

இப்பகுதியில் பெரும்பதட்ட நிலை காணப்படுவதாகவும்,வீடுகள் பல தீயிட்டுக் கொளுத்தப்பட்டதுடன் பல வீடுகள் சேதமாக்கப்பட்டன. அப்பகுதியில் சனநடமாட்டம்இருக்கவில்லை. இச்சம்பவத்தை தொடர்ந்து போக்குவிரத்து சேவைகள் எதுவும் நடைபெறவில்லை. அந்த பகுதி முழுவதுமே அமைதியாக இருந்தது இராணுவத்தினர் மாத்திரம் இப்பகுதியில் நிலைகொண்டிருக்கின்றார்கள்.

### குழந்தைகள் பலி

இதனிடையே எண்ணெய் ஏற்றிவந்த ரயில் வண்டியிலிருந்தவர்கள் கிளிநொச்சியில் ரயில்பாதையை அடுத்த குடியிருப்புப்பகுதிகளில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கிளிநொச்சி 155ம் கட்டை என்ற இடத்தில் வீடொன்றில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டு சகோதரக் குழந்தைகள பலியாகியுள்ளனர். இக்குழந்தைகள் பரராஜசேகரம் என்பவரது குழந்தைகளாகும். இச்சம்பவத்தில் அடுத்த வீட்டிலுள்ள இன்னொரு குழந்தை படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளது

இப்பத்திரிகை ஈழநாடு' லிமிட்டட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம. சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P O. Box 49, Telegram Tele phone number 22389-24126.